Registered as a News paper
பக்கங்கள் 10
விலை 07/=

# ஈழநாதம்

மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்

Eezhanatham

மின்னியல், இலத்திரனியல்
உபகரணங்கள் பெறுவதற்கு OR
பழுதுபார்க்க, பாடல்கள், படங்கள், ஒலி, ஒளி
நாடா, இசை தட்டுக்கள் பெறுவதற்கு நாட
வேண்டிய இடம்
T.V.R. ELECTRONIC'S
NO 88/1
DOCTOR LANE
KALUWANCHIKUDI.
காட்சியறை
T.V.R SONY SHOW ROOM
பிரதான வீதி,
(மக்கள் வங்கி அருகாமை)
களுவாஞ்சிகுடி

நாதம் 01 திருவள்ளுவர் ஆண்டு 2035 தை 24 06.02.2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை 240

# தேசியத் தலைவரின் புகைப்படத்தை வீசி எறிய அதிரடிப்படைக்கு உரிமையில்லை

## பாரிய விளைவு ஏற்படுமென்கிறார் ஜனார்த்தனன்

(நமது நிருபர்)

தேசியத் தலைவரின் புகைப்படத்தை அகற்றி, வீசுவதற்கு சிறிலங்காப் படையினருக்கு எந்த உரிமையுமில்லை.

இந்த சம்பவம் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ஜனார்த்தனன்.

நேற்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இருந்த தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் புகைப்படத்தினை அகற்றி விசேட அதிரடிப்படையினர் வெளியே எறிந்த சம்பவம் தொடர்பாகவே அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி ஜனார்த்தனன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நேற்று முன்தினம் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த எமது பெண் போராளி ஒருவரை துப்பாக்கியைக் காட்டி சுட்டுக்கொல்ல முயற்சி செய்திருக்கின்றார்கள். மற்றும் நேற்று

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# தேசியத் தலைவரின் உருவப்படம் அதிரடிப்படையினரால் அகற்றல்!

## திருக்கோயில் பிரதேச செயலகத்தில் சம்பவம்

(நமது நிருபர்)

**திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குள் வைக்கப்பட்டிருந்த தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் உருவப்படம் சிறிலங்கா அதிரடிப்படையினரால் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவின் படம் வைக்கப்பட்டுள்ளது.**

இச்சம்பவத்தையடுத்து விடுதலைப்புலிகளுக்கும் அதிரடிப்படையினருக்கும் இடையே முறுகல் நிலை உருவாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று பிற்பகல் திருக்கோயில் பிரதேச செயலகத்திற்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் அங்கு வைத்திருந்த தேசியத் தலைவரின் படத்தை அகற்றிவிட்டு ஜனாதிபதி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## அகதி முகாமுக்கு செல்வதற்கு அதிரடிப்படையினர் அனுமதி மறுப்பு

(நமது நிருபர்)

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள அகதி முகாம் ஒன்றில் பொது மக்களைச் சந்திக்க சென்ற மட்டு. அம்பாறை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கவியாளன் அவர்களை பொது மக்களைச் சந்திக்க முடியாது என அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக நாங்கள் உள்ளோம் பாதிப்புற்ற மக்களின் பிரச்சினைகளை அவர்களுடன் நேரடியாக சென்று பேசுதற்கு உரிமை உள்ளது. இவ்வாறு அனுமதி மறுப்பதான செயல் போர் நிறுத்த மீறல் என கவியாளன் படைத்தரப்பினரிடம் தெரிவித்துள்ளார்.

இதன் பின்னர் இருதரப்புக்குமிடையே சிறிது நேரம் வாய்த்தக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## திருக்கோவிலில் இளைஞர் ஒருவர் விசேட அதிரடிப்படையினரால் தாக்குதல்

(சர்வேஸ்வரன்)

திருக்கோவில் பிரதேசத்தில் இளைஞரொருவர் விசேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறையிடப்பட்டுள்ளது.

திருக்கோவில் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த ஜெயம் அரவிந்தன் (26) என்னும் இளைஞரே தாக்கப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாமுக்கு முன்னால் அரசினால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களை வழங்கிக் கொண்டிருந்த விசேட அதிரடிப்படையினர் அங்கு பொருட்களைப் பெறுவதற்காகச் சென்ற பிரஸ்தாப நபரை அங்கு

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## தேசவிரோதக் கும்பல் அட்டகாசம் முஸ்லிம் காங்கிரஸ் புகார்

(நமது நிருபர்)

பொலன்னறுவை மாவட்டம் எல்லைப்புற முஸ்லிம் கிராமங்களில் தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர்களின் அத்துமீறல் சம்பவங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் குறித்து சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளது.

தற்போது இப் பிரதேசத்தில் பெரும் போக வேளான்மை அறுவடை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அப்பிரதேசத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் ஒத்துழைப்புடன் செயற்படும் தேசவிரோதக் கும்பல் முஸ்லிம் விவசாயிகளிடம் கப்பம் கோருவதாகவும் கப்பம்

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

# விரைவாக சர்வதேச உதவிகள் தமிழர் தாயகத்துக்கு கிடைக்க வேண்டும்

## எதிர்மறையான முடிவுகளை அரசு கொண்டுள்ளதாக தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(நமது நிருபர்)

எங்கள் ஆலோசனைக்கு எதிர்மறையான முடிவுகளைத்தான் தங்கள் கருத்துக்களாக நோர்வே அனுசரணையாளர்களூடாக எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள் என்று தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

நேற்று சிறீலங்காவிற்கான நோர்வேத் தூதுவரை சந்தித்த பின்னர் ஊடகவியாலளர்களுக்கு வழங்கிய பேட்டியின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த பேட்டியின்போது சு.ப.தமிழ்ச்செல்வன் வழங்கிய பதில்கள் வருமாறு:

**கேள்வி:-** இன்றைய சந்திப்புத் தொடர்பாக?

**பதில்:-** நேற்று நோர்வே

(தொடர்ச்சி 10ம் பக்கம்)



### இன்றைய நாளில்

**தகவல்துளி**

**1914ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14ம் திகதி ஆரம்பித்து 1918ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி வரையிலான 1561 நாட்கள் முதலாம் உலக மகா யுத்தம் நடந்தது. இதில் 1 கோடி படை வீரர்களும் 2 கோடி மக்களும் இறந்தனர்.**

# செய்தித் துளிகள்

## வினாத்தாள் திருத்தும் பணி

(எஸ்.சசி)

கல்விப் பொது சாதாரண தர வினாத்தாள் திருத்தும் பணி கடற்கோள் அனர்த்தத்தினால் பிற்போடப் பட்டிருந்தது. நேற்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு எதிர்வரும் 14 ஆம் திகதியுடன் முடிவடைய இருக்கின்றது.

இதே வேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் வினாத்தாள் திருத்தும் பணி எதிர்வரும் 15 ஆம் திகதியே ஆரம்பமாக உள்ளது. கடற்கோளினால் பாதிக்கப்படாத ஏனைய மாவட்டங்களில் வினாத்தாள்கள் திருத்தும் பணி ஏற்கனவே முடிவடைந்து விட்டது என்பதும் குறிப்பிடத் தக்கது.

## தொலைபேசி அழைப்புத் துண்டிப்பு

(நமது நிருபர்)

ரெலிக்கொம் நிறுவனத்தினால் தொலைபேசித் தொடர்புகள் எடுக்கப்பட்டு இருந்த பாவனையாளர்களின் பதினையாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் பணம் செலுத்தாமையினால் நேற்று முன்தினம் திடீர் என்று குறிப்பிட்ட தொலை பேசிகளின் வெளியில் செல்லும் அழைப்புக்கள் யாவும் துண்டிக்கப்பட்டு விட்டது.

தற்போது உள்வரும் அழைப்புக்கள் மட்டும் வருவதாகவும் தொடர்ந்து மூன்று மாத காலத்திற்கும் நிலுவைப் பணம் செலுத்தாவிட்டால் முற்றாகத் தொலைபேசி அழைப்புக்கள் யாவும் துண்டிக்கப்பட்டிருப்பதாக ரெலிக்கொம் நிறுவனத்தின் பிரதி நிதி ஒருவர் தெரிவித்தார்.

## கொட்டில் அமைக்கும் பணி

(ந.கபிலன்)

முல்லைத்தீவுப் பகுதியில் ஆழிப் பேரலைத் தாக்கத்தினால் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தற்போது பாடசாலைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டுள்ளதால் தற்காலிக கொட்டகைகளில் அமர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணத்தினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவியுடன் வட்டுவான் பகுதியில் 255 தற்காலிக கொட்டகைகள் அமைக்கும் பணி இடம் பெற்று வருகின்றது.

முல்லைத்தீவின் பள்ளப்பட்டு, மணற் குடியிருப்பு, வட்டுவான் போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களைக் குடியமர்த்தவே இக் கொட்டகைகள் அமைக்கப்படுகின்றது.

இவை மிக விரைவில் பூர்த்தி அடைந்து மக்கள் குடியமர்த்தப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பஸ் கம்பனி இழப்பு

(நமது நிருபர்)

சுனாமி ஆழிப்பேரலையினால் நியூ ஈஸ்டன் பஸ்கம்பனியினருக்கு இரண்டு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கம்பனியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.சுமர்டீன் தெரிவித்தார்.

காத்தான்குடி, கிண்ணியா, வாகரை ஆகிய டிப்போக்கள் முழுமையாகவும் பொத்துவில், அக்கரைப்பற்று, மூதூர் பிரதேசங்களில் டிப்போக்கள் பகுதியாகவும் சேதமாக்கப்பட்டு சுமார் 30 பஸ் வண்டிகள் பாவனைக்குதவாத நிலையில் காணப்படுவதனால் தற்போது குறிப்பிட்ட சில பகுதிகளில் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் அமைந்து உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# மாணவர்களின் மனநிலையில் மாற்றம் ஏற்பட உளவியல் பயிற்சி அவசியம் தேவை

(ந.கபிலன்)

முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமிப் பேரலை காரணமாக பாதிக்கப்பட்ட மாணவர்களின் மனநிலையை மாற்றம் அடையச் செய்ய உளவியல் பயிற்சியே தேவை என முல்லைத்தீவு வெட்டுவாக்கால் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் தெரிவிக்கின்றார்.

முல்லைத்தீவுப் பகுதியில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள சில பாடசாலைகளில் மாணவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மாணவர்களின் மன நிலையை மேம்படச் செய்ய கல்வி நடவடிக்கையை விட விளையாட்டுக்களே இடம் பெற்று வருகின்றது.

சுனாமிப் பேரலை நிகழ்வுகளை நேரடியாகக் கண்ணுற்ற இச்சிறுவர்கள் வீதியால் வாகனங்கள் செல்லும் போது கூட கடல் அலை வருகிறது. என அச்சம் கொள் கின்றனர். எனவே இவ்வாறான மாணவர்களுக்கு முல்லைதீவுப் பகுதி பாடசாலைகளில் விளையாட்டு நிகழ்வுகளையே ஆசிரியர்கள் ஈடுபடுத்தி வருகின்றனர். பாடசாலை சீருடைகள் இன்றி மிகவும் கஷ்ரத்துடன் பாடசாலை வரும் இவர்கள் கல்வி கற்கும் நிலையில் தற்போது இல்லை எனவும், இப்பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

வெட்டுவாய்கால் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஐம்பதுக்கும் குறைவான மாணவர்களே தற்போது பாடசாலைக்கு வருகின்றனர். முல்லைதீவுப் பகுதியில் கள்ளப்படு, வெட்டுவான், மணல் குடியிருப்பு போன்ற பகு திகளைச் சேர்ந்த மாணவர்களும் இப்பாடசாலையில் புதிதாக இணைந்து கல்வி கற்று வருகின்றனர். இவ்வாறான மாண்வர்களோடு வெட்டுவாக்கால் மாணவர்களும் இணைந்து விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

(நமது நிருபர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு தற்போது மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு சென்றுள்ளது.

இரா.சம்பந்தன், மாவை சேனாதிராஜா மற்றும் கே.துரைரத்தினசிங்கம் ஆகியோர் இந்த குழுவில் இடம்பெற்றுள்ளார்கள்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்வையிட்ட இவர்கள், இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களையும் சந்தித்து ஆறுதல் கூறினார்கள். திருகோணமலையிலிருந்து வாகரை ஊடாகவே இவர்கள் மட்டக்களப்பு சென்றடைந்துள்ளனர்.

இதற்கிடையில் மட்டக்களப்பு மாவட்டம் கோட்டைக் கல்லாறு கிராமத்தில் நிவாரணக் கொடுப்பனவுகளில் ஊழல்கள் இடம் பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தி கிராம சேவை அலுவலகர்களுக்கு எதிராக நேற்று முன்தினம் மக்கள் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களில் ஒரு பகுதியினருக்கே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தி பாதிக்கப்பட்டவர்களும்,

பாதிக்கப்படாத சிலருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது போல் தமக்கும் நிவாரணம் வழங்கக் கோரி பாதிக்கப்படாத ஏனையோரும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை திருகோணமலை கடற்கரையில் நேற்று முன்தினம் தலையில்லாத நிலையில் பெண்ணொருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது. இந்தச் சடலம் ஆழிப்பேரலையினால் உயிரிழந்த உல்லாசப் பயணியொருவரின் சடலமாக இருக் கலாம் என கருதப்படுகின்றது.

# திருமலையில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கிராம சேவையாளர்களிடம் தெரிவித்த கருத்து தவறானது

## பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர

(நமது நிருபர்)

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களில் மீனவ தொழில்புரிவோரே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது தொழில் உபகரணங்கள் பாதிக்கப்பட்டமை பற்றி கிராம சேவை அலுவலகர்களிடம் தெரிவித்த தகவல்கள் முற்றிலும் தவறானவையாகும்.

குறைந்த எண்ணிக்கையான உபகரணங்கள் பாதிக்கப்பட்டிருக்கும் போது அதிகளவில் பாதிக்கப்பட்டதாக இவர்கள் கிராம சேவையாளர்களிடம் தெரிவித்துள்ளனர்.

கடல் தொழில் மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் தகவல்களைச் சேகரிக்கும் போது இத் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர தெரிவித்தார்.

திருகோணமலை கடல் அனர்த்த நடவடிக்கைக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கச்சேரியில் நடைபெற்றது. இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், திருகோணமலை மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களில் 98 வீதமானவர்கள் மீனவர்களே.

தகவல்களைச் சரியாகத் திரட்ட 6 மாதகாலத்திற்கு 24 அதிகாரிகளை கடற்தொழில் மீன்பிடித் திணைக்களம் பணிக்கு அமர்த்தியுள்ளது. இவர்கள் வெருகல் தொடக்கம் கொக்கிளாய் வரை தகவல்களை திரட்டி வருகின்றார்கள்.

இவர்களின் நடவடிக்கைக்கு வசதியாக 8 அலுவலகங்கள் அமைக்கப்பட்டுள்ளது. குறைந்தளவிலான படகுகள். வள்ளங்கள் , வலைகள் பதிவில் இருக்கும்போது பெரிய அளவிலான பாதிப்புக்கள் கிராம சேவையாளர்கள் மூலமாக குறிப்பிடப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

# உலக உணவுத் திட்டத்தால் 175 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள்

(நமது நிருபர்)

திருக்கோணமலை மாவட்டத்தில் கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட30.000 குடும்பங்களைச் சேர்ந்த 100,000 பேருக்கு உலக உணவுத் திட்டத்தால் 175ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும், அரசாங்கத்தினால் 200ரூபா பணம் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலமாகவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த வியாழக்கிழமை தொடக்கம் இவை வழங்கப்பட்டு வருகின்றது. கூட்டுறவுசங்கங்களில் வைத்து இவைகள் வழங்கப்படுகின்றது. உணவுப் பொருட்களையும். பணத்தையும் பெறுவதற்காக பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு கூப்பன்கள் கிராம சேவை அலுவலகர்கள் மூலமாக ஏலவே வழங்கப்பட்டுள்ளது.

இதற்காக அரசாங்கம் 125 மில்லியன் ரூபாய்களை திருகோணமலைக்கு வழங்கி வைத்துள்ளது. இவ்உதவிகள் சகல பாதிக்கப்பட்டவர்களுக்கும் முதல் கட்டமாக எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னதாக வழங்கி வைக்கப்படும் எனவும் இதனைத் துரிதப்படுத்துவதற்காக விடுமுறைக் காலத்திலும் கூட்டுறவுக் கடைகள் , திறக்கப்பட்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுபோன்று பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் 2500 ரூபா மக்கள் வங்கி மூலமாக வழங்கி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இறந்தவர்களுக்கு 15,000ரூபாவும் வழங்கப்படுகின்றது. இவ்வேலைத்திட்டம் திருகோணமலை மாவட்டத்தில் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிப்ப தற்காக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜா திருகோணமலை மாவட்டத்திற்கு பிரதி ஆணையாளராக ஜி.ஜெயரெத்தன என்பவரை அனுப்பி வைத்துள்ளார்.

இவர் சகல பிரதேச செயலாளர் பிரிவு அலுவலகங்களுக்கும் சென்று நடவடிக்கைகளைப் பார்வையிட்டு வருகின்றார்.

# திருமலையில் வீடுகள் அமைத்துக் கொடுக்க நகர அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை

(எஸ்.எஸ்.குமார்)

திருகோணமலை மாவட்டத்தில் பட்டணமும் சூழலும், குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடல்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட 800 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கு நகர அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்காக "வ்லேன" பெரியகுளம் காசிம் நகர் ஆகிய இடங்களில் காணிகளை இனம் கண்டு வீட்டுத்திட்டத்திற்கான வரைபடங்களை அமைக்கும் முயற்சிகளிலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இதன்படி "வ்லேன்" பகுதியில் 400 வீடுகள் தொடர் வீடாகவும், இதில் 24 தொகுதிகளில் 3 மாடிகளில் அமைக்கப்படவுள்ளது. பெரியகுளத்தில் 150 , குச்சவெளிகாசிம்நகரில் 250 தனிவீடுகளும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது.

வெள்ளிக்கிழமை மதியம் திருகோணமலை கச்சேரியில் நடைபெற்ற சுனாமி நடவடிக்கை குழுக்கூட்டத்தில் இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் திருகோணமலை மாவட்ட அபிவிருத்தி அமைச்சர் நஜீப் ஏ மஜீத், சுதந்தர கட்சியின் செயலாளர் மைத்திரபால சிறிசேன, சுதேச வைத்திய அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, துறைமுக அபிவிருத்தி பிரதி அமைச்சர் டிலான்பெரேரா, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜயசேகர, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, அத்தியாவசிய சேவைகள் பிரதி ஆணையாளர் டிகாடவல ஜெயரத்ன, மற்றும் மாவட்ட இராணுவ கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல், மாவட் அரசாங்க அதிபர் காமினி ரொட்றிகோ, மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து மூதூர், கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுகளில் காணிகளை இனம் காணும் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்கு வீடுகள் அமைக்கும் திட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு வீடுகளும் 500 சதுர அடிகள் கொண்டதாகவும். 2 படுக்கை அறைகள், ஒரு சமையல் அறை கொண்டதாக சுமார் 400.000 செலவில் அமைத்துக் கொடுக்கப் படும். இதற்காக 50 மில்லியன் ரூபாய் உடனடியாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

# அம்பாறை தமிழ்ப் பிரதேசங்களுக்கு அரசு நிவாரணப் பகிர்வில் புறக்கணிப்பு

## பத்மநாதன் எம்.பி

(வி.ரி சகாதேவராசா)

அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்கள் அரசினால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. மீள்கட்டமைப்பு வேலைத்திட்டங்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவது ஏன்?

இவ்வாறு காரைதீவு சுனாமி அனர்த்த நிவாரண இணைப்புக் குழுக் கூட்டத்தில் பேசிய அம்பாறை மாவட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் க. பத்மநாதன் கேள்வி எழுப்பினார்.

காரைதீவுப் பிரதேச செயலகத்தில் கடந்த வியாழன் பிரதேச செயலாளர் எஸ். இராமகிருஷ் ணன் தலைமையில் கூட்டம் நடை பெற்றது.

அங்கு பத்மநாதன் எம்.பி மேலும் பேசுகையில்:-

தெற்கிலே அரசு துரிதமாகப் பல வேலைத்திட்டங்களை பிரதமரின் நேரடிக் கண்காணிப்பிலே முன்னெடுத்துச் செல்கின்றது.

ஆனால் வட கிழக்குக்கான மீள் கட்டுமானப் பணிகள் மந்தகதியில் நகருகின்றன. அதுவும் அம்பாறை மாவட்டத்தில் தமிழர் பிரதேசம் முற்றாக புறக்கணிப்புக்குள்ளாகின்றது.

காரைதீவு கரவாகுவட்டையில் வீடமைப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இங்கு தம்பி சகா நல்ல முன்மொழியை முன்வைத்தார். இதனை செயற்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும்.

வெளிநாடுகளில் இருந்து ஏராளமான நிதி கிடைப்பதாகக் கூறப்படுகின்றது ஆனால் இங்கு ஒன்றையும் காணோம்.

எமது கலாசாரத்திற்கு மாடி வீடுகள் சரிப்பட்டு வராது. அம்பாறை அரச நிருவாகம் கரையோரப் பிரதேசத்திற்கு வர வேண்டும். அதற்கு தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து குரல் எழுப்ப இருக்கின்றது.

பாடசாலை மீள ஆரம்பிப்பது தொடர்பாக கூட்டம் நடாத்தினோம். அங்கு எதிர்ப்பு இருந்ததாக தினக்குரல் பத்திரிகை தவறான செய்தியை போட்டிருந்தது. பிரதம ஆசிரியருடன் நான் பேசியிருக்கின்றேன் மக்களுக்காகவே நாம் இயங்குகின்றோம் என்றார்.

விடுதலைப் புலிகளின் சுனாமி அனர்த்த மீள் கட்டுமான அம்பாறை மாவட்ட இணைப்பாளர் மார்ஷல், காரைதீவு அரசியல் துறைப் பொறுப்பாளர் தங்கவேல், முக்கியஸ்தர்களான ரஞ்சன், புஸ்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். அங்கு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. கரவாகுவட்டையில் வீடமைப்புத் திட்டம் நிறுவுதல்.
2. குளவெளி 2 ஏக்கரில் பாடசாலை நிறுவுதல்.
3. கணேசன் மில் பகுதியில் ஆஸ்பத்திரி நிறுவுதல்.
4. சுகாதார அதிகாரிகளது கவனத்தை ஈர்த்தல்.
5. என்.ஜீ ஓ கூட்டங்கள் நடாத்தல்.
6. மின்சார சபை சேவையை விஸ்தரிக்க கோரல்.
7. கரையோர செயலகத்தை ஸ்தாபிக்க கோரல்

## மக்களுக்கு இனிப்பு பண்டங்களை திணித்து படையினர் ஒளிப்பதிவு

(ஆ.கந்தசாமி)

ஸ்ரீலங்காவின் 57வது சுதந்திர தினத்தை யாழ். குடாநாட்டு மக்கள் முற்றுமுழுதாக பகிஷ்கரிப்புச் செய்திருந்த போதும் பொது மக்களை பலவந்தமாக சுதந்திரதின களியாட்ட நிகழ்வுகளில் பங்குபெறச் செய்யும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரும், பொலிசாரும் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நண்பகல் வேளை இராணுவவாகனத் தொடரணியாக அங்கு வந்திறங்கிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர், மற்றும் பொலிசார் மக்களிடம் இனிப்பு பண்டங்களையும், உணவுப் பொதிகளையும் பலவந்தமாகத் திணித்து அவற்றை புகைப்படம் மற்றும் வீடியோப் படங்களையும் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். இந் அநாகரீக செயல்கள் குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## யுனிசெப் நிறுவனம் கூடாரங்கள் வழங்கல்

சுனாமியால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலயங்களில் தங்கவைக்கப்பட்டு தற்போது பாடசாலைகள் ஆரம்பித்துள்ளமையால் உடனடியாக அகதிகள் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு வெளியேற்றப்பட்ட களுதாவளை, மாங்காடு, செட்டிபாளையம் போன்ற பிரதேச அகதிகளுக்கான மீள் குடியமர்த்தலுக்கான கூடாரங்கள் நேற்று முன்தினம் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அது மட்டுமன்றி யுனிசெப் அமைப்பினரால் படங்குகள் வழங்கப்பட்டது. மட்டுமன்றி அவர்களினாலேயே கூடாரங்கள் அமைத்தும் கொடுக்கப்பட்டது. இக்கூடாரங்கள் தமது முன்பிருந்த குடியிருப்புக்களுக்கும் முன்பாகவே தற்போது கடலோரங்களை அண்மித்ததாகவே பல கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளதையும் காணக்கூடியாதாக இருந்தது. அத்துடன் மக்கள் கூடாரங்களில் இருந்து கொண்டு தமது சொந்த இருப்பிடங்களை புனரமைத்து வருவதனையும் காணக்கூடியதாக உள்ளது.



கடற்கோள் அனர்த்தத்தினால் முற்றாகப் பாதிக்கப்பட்ட திருக்கோயில் தம்பட்டை கிராம மக்களுக்காக, தம்பட்டை மேட்டு நிலத்தில் 51 தற்காலிக குடிசைகளை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அமைத்து வருவதைப் படத்தில் காணலாம். (படம் - க.சரவணன்)

## மஜீத் ஏறஊபுக்கு காத்தான்குடியில் வரவேற்பு

(காத்தான்குடி நிருபர்)

நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் தலைவராக தெரிவான மஜீத் ஏ.றஊபுக்கு காத்தான்குடியில் வரவேற்பளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த வைபவம் காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பள்ளி ஜாலர்ஆ பள்ளிவாயலின் ஆசிரியர் எஸ்.எல்.ஏ.கபூர் தலைமையில் இடம்பெற்றது.

சிறப்புரையாற்றிய பள்ளிவாயல் முஸ்லிம் நிறுவன சம்மேளன தலைவர் எல்.அப்துல் ஜவாத் தமதுரையில் புதிய தலைவராக நியமனம் பெற்றுள்ள றவூப் ஏ.மஜீத் இப்பதவியின் மூலமாக கிழக்கு மக்களுக்கு சீரான போக்குவரத்து சேவையினை வழங்க அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் முன்னாள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் அரசியலில் எப்போதும் தூய்மையானவராக ஊழல் அற்றவராக மக்கள் சேவையே எனது சேவை என்ற நல்ல பக்குவத்துடன் செயற்பட்டு அனைவரினது மனதிலும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளார்.

அவ்வாறே ஊழல், துஸ்பிரயோகம், இலஞ்சம் அற்ற முறையில் தமது பதவியை செய்தால் யாருக்கும் அஞ்ச வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினார்.

மௌலவி எச்.எம்.எம். இப்றாஹீம் (நத்வி) உரை நிகழ்த்திய நிகழ்வில் மௌலானா மௌலவி சங்கைக்குரிய எம்.ஏ.அப்துல்லாஜ்றஹ்மான் விஷேட துஆப் பிரார்த்தனையை நடாத்தினார்.

## விவசாயப் பயிர்கள் மீண்டும் பயிரிடும் நடவடிக்கை

(நிஷாந்)

சுனாமி கடற்கோளினால் பாதிக்கப்பட்டு அழிந்து போன விவசாயத்துறை சார்ந்த அனைத்துப் பயிர்களும் மீண்டும் பயிரிடப்படும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

சுனாமி அனர்த்தத்தினால் களுதாவளை, தேற்றாத்தீவு, மாங்காடு, செட்டிபாளையம், குருக்கள்மடம் போன்ற பிரதேசங்களில் முற்றாகப் பல விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்டிருந்தன. அவற்றிலும் களுதாவளைப் பிரதேசத்திலேயே அதிக பாதிப்புக்குள்ளான மிளகாய்ச் செய்கை அத்துடன் வெங்காயம், தக்காளி போன்ற பயிர்கள் மீண்டும் விவசாய நிலங்களை சேதன வளமாக்கிகள் மூலம் வளமாக்கி நிலத்தைப் பண்படுத்திய பிறகு மீண்டும் பயிரிட அப்பகுதி விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். அத்துடன் அதிகளவான இலாபம் ஈட்டித்தரக் கூடிய வெற்றிலைச் செய்கையையும் பெருமளவு களுதாவளைப் பகுதியில் சேதமடைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தற்போது புதிதாகத் தோட்டங்கள் அமைக்கப்பட்டு வெற்றிலைக் கொழுந்துகள் நடப்படும் வேலைகள் மிகவும் தீவிரமாக நடைபெறுவதைக் காணக்கூடியதாக உள்ளபோதும் வெற்றிலையின் விலை இன்னும் 4 அல்லது 5 மாதங்கள் குறையாது இருக்கும் என்பதுஅறிய முடிகிறது.

## கல்முனை தமிழ் பிரதேச செயலகத்திற்கு பிரதேச செயலர் கோபாலரெத்தினம் இணைப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை (தமிழ்) பிரதேச செயலகத்திற்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம்.கோபாலரெத்தினம் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார். சுனாமி நிவாரண விடயங்களையும், மேலதிக நிருவாகக் கடமைகளையும் செய்வதற்காக அம்பாறை அரசாங்க அதிபர் ஹேரத் அபேதீரவினால் இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனிடையே கல்முனை (தமிழ்) பிரதேச செயலாளராக வ. வாசுதேவன் கடமையாற்றிவருவது குறிப்பிடத்தக்கது.

கல்முனை (தமிழ்) பிரிவில் 1270 பேர் சுனாமியால் பலியாகியுள்ளனர். இதுவரை 1116 பேருக்கு ரூபா 15000 இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலிருந்து 08 கிராம சேவையாளர்கள் விடுவிக்கப்பட்டு ஏனைய மூன்று பிரதேச செயலகங்களில் சுனாமிப் பணிகளுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

பொத்துவில், காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களுக்கு தலா மூவரும் சாய்ந்தமருதுக்கு இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். என நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எம். கோபாலரெத்தினம் தெரிவித்தார். கல்முனைப் பிரதேச அகதி முகாம்களில் இருப்போரை நிரந்தரமாக குடியேற்ற அரச காணி இல்லாதிருப்பது பாரிய பிரச்சினையாக உள்ளது.

## ஆழிப்பேரலையால் இழந்த வடகிழக்கு மாகாணக் கல்வியை மீளக்கட்டியெழுப்ப கல்விச் சமூகம் ஒத்துழைக்க வேண்டும்

### கல்முனையில் மாகாண கல்விச் செயலாளர் வேண்டுகோள்

(வி.ரி.சகாதேவராஜா)

"ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக வட.கிழக்கு மாகாண கல்விப்புலம் சற்று தேக்க நிலையை அடைந்துள்ளது. இழந்த கல்வியை மீளக் கட்டியெழுப்ப முழுக்கல்விச் சமூகமும் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்."

இவ்வாறு கல்முனையில் நேற்று முன்தினம் உரையாற்றிய வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இரா. தியாகலிங்கம் வேண்டுகோள் விடுத்தார்.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ. அப்துல் நிசாம் தலைமையில் அதிபர், கல்வி அதிகாரிகளுக்கான கூட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெற்றது.

அங்கு செயலாளர் தியாகலிங்கம் மேலும் பேசுகையில்,

"சுனாமி எமது மாகாணத்தில் சொல்லொண்ணா சோகத்தையும், இழப்பையும் ஏற்படுத்திச் சென்றுள்ளது. சுனாமிக்காக நாம் சோர்ந்து விட முடியாது. எமக்கென எதிர்கால துணிவான சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய முக்கிய பணி உள்ளது.

கல்வியில் ஏற்பட்டுள்ள தேக்கத்தை நாம் உடனடியாக நிவர்த்திக்க தயாராக வேண்டும். அதற்காகவே பாடசாலைகளை முடிந்தளவு ஆரம்பிக்குமாறு கூறியிருந்தோம் என்றார். எமது மாணவர்களின் கல்வி சுமார் 2 மாதங்களுக்கு பாதிக்கலாம் எனினும் நாம் அதனையும் சேர்த்து எதிர்காலத்தை திட்டமிட்டு கல்வியை மீட்டெடுக்க வேண்டும். உளவளத் துணையினரின் பங்கும் அவசியமானது.

எமது பிராந்தியத்தில் அழிந்த பாடசாலைகளுள் 95 வீதமானவை கடலிலிருந்து 200 மீற்றர் பரப்புக்குள் உள்ளவை. அவற்றை மீள அங்கு புனரமைக்க முடியாது. எனவே வேறு இடத்தில் மீள நிர்மாணிக்கும் போது அதிபர்கள் தன்னிச்சையாக முடிவெடுக்காமல் கல்விச் சமூகத்தின் ஒத்துழைப்பு பெறப்பட வேண்டும் என்றார்.

## கல்விக் கல்லூரி பயிலுனர் ஆசிரியர்கட்கு உளவள வலுவூட்டல் பயிற்சி

(தனஞ்ஷயன்)

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் தாளங்குடா தேசிய கல்விக் கல்லூரியில் சுனாமியால் பாதிக்கப்பட்டோரை அவர்களது இயல்பு நிலைக்கு கொண்டு வருவது தொடர்பான உளவலுவூட்டல் பயிற்சிக் கருத்தரங்கு கடந்த சனி, ஞாயிறு தினங்களில் மட்டக்களப்பு தேசியகல்விக் கல்லூரியில் நடைபெற்றது.

மன்றேசா தியான இல்லப் பொறுப்பாளர் பாதர் போல் சற்குணநாயகம் மற்றும் வைத்திய நிபுணபுனர் கணேஸ் கல்வி கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி வகுப்பில் பயிற்சி பெற்ற தாளங்குடா தேசிய கல்விக் கல்லூரியின் 160 ஆசிரிய பயிலுனர்கள் எதிர்வரும் திங்கள் முதல் மட்டக்களப்பு பாடசாலைகளுக்கு சென்று சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகத் தெரியவருகின்றது.

## தகவல் தொழில்நுட்ப பயிற்சி நெறிகள்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியில் லண்டன் சிற்றூயன் கில்ஸ் நிறுவனத்தால் நடத்தப்படும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.குணரெட்ணம் தெரிவித்தார்.

எனவே ஏற்கனவே இப்பாட நெறிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பித்த மாணவர்கள் தவறாது பயிற்சி நெறிக்கு சமூகம் கொடுக்குமாறும் மேலும் இப்பயிற்சி நெறியில் சேர விரும்பும் மாணவர்கள் மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் கல்லூரி அதிபர் மேலும் தெரிவித்தார்.

## எதிரிகளுடனும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது

(நமது நிருபர்)

நண்பர்களைப் போன்று எதிரிகளுடனும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஆழிப்பேரலை அனர்த்தம் கற்பித்துள்ளது என சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். நமது நாட்டை முன்னேற்றகரமான முறையில் உண்மையான அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்வதற்கு நாம் எதிரிகளாக நினைப்பவர்களோடு இணைந்து செயற்பட வேண்டியுள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இதற்கென எமது சிந்தனைகள் செயற்பாடுகள் என்பனவற்றில் முழுமையான மாற்றங்கள் கொண்டு வரப்பட வேண்டும் என அவர் கூறினார்.

இந்த கற்பித்தலை சுமார் ஒரு மணிநேரத்திற்குள் ஆழிப்பேரலை அனர்த்தம் கற்பித்துச் சென்றதனை சிறிலங்காவைச் சேர்ந்த அனைவருக்கும் தான் சுட்டிக்காட்ட விரும்புவதாக கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறிலங்காவின் 57வது சுதந்திர தின வைபவத்தில் உரையாற்றும் போது ஜனாதிபதி தெரிவித்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் அழிவடைந்துள்ள சிறிலங்காவை மீளக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் செயற்திட்டத்திற்கும் அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். அனைவரும் இதில் ஒன்றிணைவதற்காக தேசிய மட்டத்தில் மாத்திரம் அன்றி மாவட்ட மட்டத்திலும் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். சுதந்திர த்தின் பின்னர் சிறிலங்காவைச் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாக இருக்கும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

சிறிலங்காவின் 57வது சுதந் திர தினம் நேற்றுமுன்தினம் காலை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் எளிமையாகவும், கௌரவமான முறையிலும் நடைபெற்றது. இந்த வைபவத்தில் அரசியல்வாதிகள், வெளிநாட்டுத் தலைவர்கள், அரச அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். தேசிய சுதந்திர வைபவத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மௌன அகவணக்கம் செலுத்தப்பட்டது. இதனையடுத்து ஜனாதிபதியால் தேசியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. ஜனாதிபதியை கௌரவிக்கும் வகையில் 21 மரியாதை பீரங்கி வேட் டுக்கள் தீர்க்கப்பட்டன. சிறிலங்கா முப்படைகளினதும், பொலிசாரினதும் மரியாதை அணிவகுப்புக்களும் இடம்பெற்றன. எவ்வித கொண்டாட்டங்களும் இம்முறை தேசிய தின வைபத்தில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## திருக்கோவில் பிரதேசத்தில் 477 பேர்பலி! 19946 பேர் அகதிகளாக தஞ்சம்

(வி.பி.சிவப்பிரகாசம்)

அம்பாறை மாவட்டத்தில் முழுமையாகத் தமிழ் மக்களைக் கொண்ட ஒரு பிரதேசம் திருக்கோவில். இந்தப் பிரதேசம் சுனாமிப் பேரலையின் போது பெரிதும் தாக்கப்பட்ட ஒரு பகுதியாகும். சில கிராமங்கள் இருந்த இடம் தெரியாமல் 19946 பேர்கள் அகதிகளாகி பத்து நலன்புரி நிலையங்களில் 3929 குடும்பங்கள் தற்காலிகமான கூடாரங்களில் வசித்து வருகிறார்கள்.

மிகவும் இறுதியாகக் கிடைத்த தகவலின்படி 477 பேர் சுனாமிக்குப் பலியாகியுள்ளார்கள் என்றும் 140 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும் 25 பேர்களைப் பற்றி ஒரு மாதங்களுக்கு மேலாகியும் எந்த விதமான தகவல்களும் இல்லை என்று உறவினர்கள் தெரிவிக்கிறார்கள். 3784 வீடுகள் முழுமையாக உடமைகளுடன் சேதமடைந்திருக்கிறது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் அரசாங்கத்தினாலும் தனியார் மூலமாகவும் கிடைக்கத்தான் செய்கிறது.

ஆனால் பாதிக்கப்பட்ட மக்களின் கைகளுக்கு போய்ச் சேர்வதாக இல்லை என்று பத்து முகா ம்களிலுமுள்ள மக்கள் தெரிவிக்கிறார்கள். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டும் இப்பகுதிக்கு வந்து செயல்படாது இருந்தால் கடந்த ஒரு மாதத்தில் சுனாமியால் இறந்தவர்களைவிட கூடுதலான மக்கள் இறந்திருப்பார்கள் என்று முகாம்களிலுள்ள மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இங்குள்ள பத்து முகாம்களில் மண்டானை என்னும் இடத்திலுள்ள 25 ஏக்கர் நிலப்பரப்பிலுள்ள பகுதியில் 815 குடும்பங்கள் தற்காலிக கூடாரங்களில் இருக்கிறார்கள். இவர்களுக்கு அரச நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை என்று அம்பாறை மாவட்ட மானிய உரிமைகள் மன்றத் தலைவர் கே.என்.தருமலிங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததைத் தொடர்ந்து அப்பகுதிக்குத் தலைவர் கே.என்.தருமலிங்கம் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சகிதம் சென்று பார்வையிட்டு அவர்களின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு இதுபற்றி திருக்கோவில் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

மண்டானை நலன்புரி நிலையத்திலுள்ள கிராம சேவையாளரின் புள்ளி விபரப்படி 560 பேர்கள் மாத்திரம்தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு மாத்திரம்தான் நிவாரண உதவி என்று தெரிவிக்கப்படுகிறது. பிரதேச செயலாளரின் அறிக்கையில் 815 குடும்பங்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் 225 குடும்பங்களின் நிவாரணங்களுக்கு என்ன நடந்திருக்கிறது என்று அந்த முகாமிலுள்ள மக்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்கும் கொண்டுவந்துள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொடுப்பனவு அட்டை வழங்கல்

(டிலு)

சுனாமியால் பாதிக்கப்பட்டு சுனாமிக் கொடுப்பனவு அட்டை வைத்திருக்கும் சகல குடும்பங்களுக்கும் 375 ரூபா பெறுமதி கொடுப்பனவு அட்டை வழங்கப்பட்டு வருகின்றது. இவ்வட்டையைப் பெற்றவர்கள் வாராந்தம் ரூபா 200 ஐ பணமாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இக் கொடுப்பனவில் 175 ரூபா பெறுமதியான சாமான்கள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுவதுடன் 200 ரூபாய்க்கான பணம் தங்களது பிரிவிலுள்ள சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் வழங்கப்படுமென ஏறாவூர் பற்று மகாசங்க முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.மதியழகன் தெரிவித்தார்.

இது தொடர்பான ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் உங்கள் பகுதி பிரதேச செயலாளருக்கு அல்லது மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளருக்கு அறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## அகில இலங்கை ரீதியான போட்டிப் பரீட்சை மாத்தறையில்

(எம்.யுவராஜ்)

தொழில்நுட்பக் கல்லூரிகளில் வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 8ஆம் திகதி மாத்தறை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே அகில இலங்கை ரீதியான இப்போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்போட்டிப் பரீட்சைக்கு மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து மூன்று மாணவர்களும், சம்மாந்துறை தொழிநுட்பக் கல்லூரியிலிருந்து இரண்டு மாணவர்களும், அம்பாறை தொழிநுட்பக் கல்லூரியிலிருந்து மூன்று மாணவர்களும், திருமலை தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்து ஒரு மாணவனும், யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரியிலிருந்தும் இப்பரீட்சையில் பங்கு பற்றுகின்றார்கள்.

இதில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும் மற்றும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக மட்டக்களப்பு தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் எம். குணரெத்தினம் தெரிவித்தார்.

## வலிகாமம் வடக்கு பிரதேச மக்கள் தெல்லிப்பளை பிரதேச செயலகம் முன் ஆர்ப்பாட்டப் பேரணி

(ஆ.கந்தசாமி)

யாழ் வலிகாமம் வடக்குப் பிரதேசங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் தம்மை மீளக் குடியமர்த்த நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியும் ஸ்ரீலங்கா சுதந்திரமடைந்து 57 ஆண்டுகள் கடந்து விட்டாலும் கூட தமிழினம் அரசினால் தொடர்ந்து அடக்கி ஒடுக்கப்பட்டு வருகின்றமையைக் கண்டித்தும் தெல்லிப்பளை பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரையில் நடைபெற்ற இப்போராட்டத்தின் போது ஸ்ரீ லங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமது சொந்த இடங்கள் விடுவிக்கப்பட்டு அங்கு தாம் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும் என்பதையும் அன்னியர் ஆதிக்கத்திலிருந்து. சிறிலங்கா சுதந்திரமடைந்து 57 ஆண்டுகள் கடந்து விட்டாலும் ஈழத் தமிழினத்தை இலங்கை அரசு அடக்கியாள முற்படுகிறது. இதனை ஒரு போதும் தமிழ் மக்கள் ஏற்கமாட்டார்கள் என்பதனையும் வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செ.கஜேந்திரன் ,கி.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் உட்பட வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பல நூற்றுக் கணக்கானோர் படையினரது அச்சுறுத்தல்களையும் மீறி கலந்து கொண்டனர். இதன் முடிவில் தமிழினத்தின் அடிப்படை அபிலாசைகளை வலியுத்தி வலிகாமம். வடக்கு இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தினால் தெல்லிப்பளைப் பிரதேச செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டது.



கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர்நீத்தவர்களுக்கு ஆத்மசாந்தி வேண்டி ஆலையடி வேம்பு இந்து மாமன்றம் மௌன ஊர்வலமும் சர்வமதப் பிரார்த்தனையும் அண்மையில் நடைபெற்றது. இதில் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஊர்வலமாகச் செல்வதையும் காணலாம். (படம்:-க.சரவணன்)

## அவசரகால கடமைகள் மேற்கொள்வல்

(டிலு)

பொது நிருவாக அமைச்சின் DMU/PA/G2 இலக்க 2005.1.31ம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கையின் படி சமுர்த்தி அதிகார சபை மற்றும் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் மறு அறிவித்தல் கிடைக்கும் வரை வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறைதினங்களிலும் சுனாமிக் கொடுப்பனவு புனர் வாழ்வுக் கடமைகளில் ஈடுபடுவது கடமையாக்கப்பட்டுள்ளது என சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர் இ.நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

இக்கடமையில் ஈடுபடும் உத்தியோகத்தர் தொடர்பில் விசேட கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயத்தை வேறு இடத்திற்கு மாற்றுமாறு அரியநேத்திரன் எம்.பி.வேண்டுகோள்

(நமது நிருபர்)

குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தை உடனடியாகப் பொருத்தமான வேறு இடத்திற்கு மாற்றுமாறு பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.பவளகாந்தனிடம் மட்டக்களப்பு தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். கடந்த வருடம் டிசம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தை தற்காலிகமாக இயங்கவைப்பதற்காக அதே இடத்தில் தற்போது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோதும் மாணவர்களின் வரவு முப்பது வீதத்திற்கு குறைவாகவே உள்ளது.

உளரீதியாகப் பாதிக்கப்பட்ட குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலய மாணவர்கள் மீண்டும் அப்பாடசாலையில் சென்று படிக்க அஞ்சுகின்றனர். கடல்பரப்பில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இப்பாடசாலையை பொருத்தமான வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என பெற்றோர்களின் முயற்சியால் தற்போது குருக்கள்மடம் செல்லக்கதிர்காம முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கோயில் காணியும், அதைச் சூழ உள்ள சிலரின் காணிகளும் நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளனர்.

இக்காணிகளுக்குள் உடனடியாக தற்காலிக அமைவிடங்களை அமைத்து குருக்கள்மடம் கலைவாணி மகா வித்தியாலயத்தை இயங்கச் செய்யுமாறும் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ்வேண்டுகோளை ஏற்றுக் கொண்டபட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் அதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாக உறுதியளித்தார்.

## அரசினால் தகுதியற்ற அதிபர்கள் நியமனம்

### இலங்கை அதிபர் சங்கத் தலைவர் ஏ.எம்.பெரேரா

(நமது நிருபர்)

அரசாங்கம் தகுதியற்ற பாடசாலை அதிபர்களை தொடர்ந்தும் நியமித்து வருவதாக குற்றம் சுமத்தப்பட்டிருக்கிறது.இது வரை சுமார் தகுதியற்ற 4000 அதிபர்கள் பல்வேறு பாடசாலைகளில் நியமிக்கப்பட்டிருப்பதாக இலங்கை அதிபர் சங்கத் தலைவர் ஏ.எம்.பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னைய அரசாங்கம் 7000 தகுதியற்ற அதிபர்களை நியமித்திருப்பதாகவும் அதனைத் தொடர்ந்து தற்போதைய அரசாங்கமும் அதே பாணியை பின்பற்றி தகுதியற்றவர்களை பாடசாலை அதிபர்களாக நியமனம் செய்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளுக்கு 12500அதிபர்கள் தேவைப்படும் வகையில் 13586 பேர் அதிபராக நியமனம் பெற்றிருப்பதாகவும் இவர்களில் 7000பேர் அரசியல் நியமன அதிபர்கள் என்றும் பெரேரா தெரிவித்திருக்கிறார்.

# சுனாமி பற்றிய பேச்சு ஓயும்போது, அரசு யுத்தத்திற்குத் தயாராகி விடும்!





சுனாமிப் பேரலைகளால் இலங்கைக்கு ஏற்பட்ட பேரழிவு ஒரு வகையில் மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி அரசாங்கத்திற்கு இலாபகரமான ஒன்றாகிவிட்டது. ஏனெனில் அழிவுற்ற பிரதேசங்களில் பொ. ஐ.முன்னணி அரசாங்கம் புனர் நிர்மானப் பணிகளை மேற்கொள்ளப் போகிறதோ இல்லையோ அது பெருமளவிலான நிதி உதவிகளை சர்வதேசத்திடமிருந்து பெற்றுக் கொண்டுள்ளது.

ஒரு புறத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென நிவாரணப் பொருட்கள் வந்து குவிந்து கொண்டே இருக்கையில், இன்னொரு புறத்தில் நிதிஉதவிகள் தொடர்பான அறிவிப்புக்களும், முன்னைய கடன்கள் இரத்துத் தொடர்பான அறிவிப்புக்களும் வெளியிடப்பட்ட வண்ணம் உள்ளது. இந்தவகையில் சிறிலங்கா அரசாங்கம் சுனாமிப் பேரலைகள் தாக்குவதற்கு முன்னால் எதிர்நோக்கிய பாரிய பொருளாதார நெருக்கடி, அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை என்பன நிவர்த்திக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

சிறிலங்காவிற்கு ஏற்கனவே உதவிகள் வழங்கும் பட்டியலில் உள்ள நாடுகள் சுனாமித் தாக்கத்தின் பின்னர் பல மில்லியன் டொலர் உதவிகளை அறிவித்துள்ளன. இதே சமயம் இந்தோனேசியாவின் தலைநகர் ஜகர்த்தாவில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஆசிய நாடுகளை மீளக் கட்டியெழுப்புதல் தொடர்பாக ஆராய்வதற்குக் கூடிய மாநாட்டில் ஜப்பான்பாதிப்புற்ற நாடுகளுக்கு தாம் வழங்கியிருந்த கடன்களை இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளது. இதே போன்று வேறு சில நாடுகளும் அறிவிப்புச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்தகைய உதவிகளினால் சிறிலங்கா அரசாங்கம் தென்புபெறும் என்பதில் சந்தேகமில்லை. இது ஏற்கனவே உணரப்பட்டதொன்றாகியதாகவும் உள்ளது. எடுத்துக்காட்டாக இதுவரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வந்த அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி இவ்வுதவிகள் அளிக்கப்பட்டதன் பின்னர் அதிகரிப்பைக் காட்டியுள்ளது. அதாவது சுனாமியின் முன் ஒரு டொலரின் பெறுமதி 103 ரூபாவாக இருந்தது. தற்பொழுது 99 ரூபாவாக மாறியுள்ளது.

அடுத்ததாக பெருங்கடன் நெருக்குவாரத்திற்கு உள்ளாகியுள்ள சிறிலங்கா அரசுக்கு ஜப்பான் போன்ற பிரதான கடன் வழங்குனர்களை இரத்து அறிவிப்பானது பாரிய நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வாய்ப்பை அளித்துள்ளது. இந்தவகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்துக்கு சுனாமி கூட ஒருவகையில் கைகொடுத்துள்ளது என்றால் அது தப்பில்லை.

ஆனால் சுனாமிப் பேரலைகள் இத்தகைய பேரழிவுகளை ஏற்படுத்தினாலும் சிங்கள ஆட்சியாளர்கள் எவரும் தமது இனவாதச் சிந்தனைப் போக்கை மாற்றிக் கொண்டதாகவோ, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வொன்றைக் காண முற்படுவதற்கான சமிஞ்சைகளோ நடவடிக்கைகளோ தென்படுவதாக இல்லை.

அமெரிக்காவின் பாதுகாப்பு இராஜாங்கச் செயலாளர் கொலிங் பவல் ‘‘சுனாமிக் கடல் கொந்தளிப்பில் ஏற்பட்ட பாரிய பாதிப்புக்கள் இலங்கை மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளின் நீண்டகாலமாக நிலவி வரும் இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பத்தை தோற்றுவித்துள்ளது,” எனத் தெரிவித்த அபிப்பிராயமானது இத்துயர்களையும் பணியின் இரு தரப்பும் சேர்ந்து பணியாற்றுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு என்ற அடிப்படையிலானதே ஆகும்.

அதாவது சாதாரண வாழ்வியல் நடைமுறையில் கூட துயர்களில் பங்கெடுப்பதன் மூலமும் முரண்பாடுகள் தீர்க்கப்படுவதுண்டு. அதேபோன்று இனப்பிரச்சினையிலும் விட்டுக் கொடுப்புக்களுடன் நடந்து கொள்வதற்கான தேவைகளை இவ்வனர்த்தம் உருவாக்கியுள்ளதால் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படலாம் என்ற அடிப்படையிலேயே கொலிங் பவல் தனது கருத்தைத் தெரிவித்திருத்தல் கூடும்.

ஆனால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இத்தகைய சிந்தனைப் போக்கு எதையும் வெளிப்படுத்துபவர்களாகவோ, நடவடிக்கைகளை மேற்கொள்பவர்களாகவோ இல்லை. அதாவது சுனாமிப் பேரலைகளினால் தாக்கப்பட்டு தமிழ் மக்கள் பெரும் துன்பம் அடைந்துள்ள போதும், அவர்கள் தமது இனவாதக் கொள்கைகளை கைவிட்டு தமிழ் மக்களுக்கு உதவி அழிக்கவோ, அன்றி இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசியல் தீர்வு முயற்சிகளை முன்னெடுக்க தயாராக இருப்பதாகவோ இல்லை. மாறாகத் தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நிவாரண உதவிகளைத் தடை செய்வதிலும் அவற்றிற்கு இடையூறு செய்வதிலுமே ஈடுபாடு காட்டுபவர்களாக உள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சிறிலங்கா அரசிடம் இருந்து உடனடி நிவாரணங்கள் எவையும் வந்து சேரவில்லை என்பதும், இவ்வனர்த்தத்தால் மக்கள் பாதிக்கப்பட்ட போது மீட்புப் பணியில் விடுதலைப் புலிகளும் நிவாரணப் பணிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினருமே முக்கிய பங்காற்றினர் என்பதும் வெளிப்படையானது. அத்தோடு தமிழ் மக்களும் பெரும் பங்களிப்பைச் செய்தனர் என்பதும் உலகம் அறிந்தது.

இப்பணியானது தனியாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் மட்டுமல்ல இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் பெருமளவு வெளிநாட்டு நிவாரணப் பொருட்கள் வந்து குவிந்த போதும் சிறிலங்கா அரசாங்கம் தமிழர் தாயகப் பகுதிகளில் ஏற்பட்ட அழிவுகளுக்கு ஏற்ப அவை தமிழ் மக்களுக்கு சென்றடையக்கூடிய வழி வகைகளைச் செய்யத் தயாராக இல்லை. மாறாக தமிழ் மக்களுக்குக் கிடைத்து வந்த நிவாரணப் பொருட்களையும் கிடைக்கக்கூடிய நிவாரணப் பொருட்களும் இடையூறு செய்யும் வகையிலேயே அரசு நடந்து கொள்கின்றது. அரசின் இந்நடவடிக்கைகள் பின்வருமாறு அமைந்தன.

**1.** தனியார், அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் கூட அரச செயலணிக் குழுமூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என நிவாரணப் பொருட்களை அரச மாவட்ட செயலகங்களில் குவித்தது. குறிப்பாக திருமலை, அம்பாறை மாவட்டத்தில் இது ஒரு பறிப்புப் போன்றதாகவே இருந்தது. இதன்போது இவற்றின் விநியோகத்தின் போது தமிழர் இதில் புறக்கணிக்கப்பட்டனர். பெருமளவு பொருட்கள் மோசடி செய்யப்பட்டன.

**2.** நிவாரணப் பணி நடவடிக்கைகளை ஆயுதப் படைத் தரப்பினரிடம் ஒப்படைத்ததன் மூலம் நிவாரணப் பணியில் ஈடுபட்ட அரச சார்பற்ற நிறுவனங்களை வெளியேற்றுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடியதான உதவிகளை மட்டுப்படுத்தியும் இல்லாமலும் செய்தல்.

**3.** தமிழ் பிரதேசங்களில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் நிவாரணப் பொருட்கள் மீது அவை விடுதலைப்புலிகளுக்கு வருவதாகக் கூறி தீவிர பரிசோதனைகளை மேற்கொள்ளுதல்.

**4.** அனர்த்தங்களைப் பார்வையிட வரும் வெளிநாட்டு அரச மற்றும் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள் மற்றும் ஆட்சித் தலைவர்களின் பயண நிகழ்ச்சி நிரலில் தமிழர் தாயகப் பிரதேசங்களை ஓரங்கட்டுதல். இதன்மூலம் அவர்கள் பிரதேசங்களைப் பார்வையிடுதலைத் தவிர்த்தல் அன்றி திசை திரும்பி விடுதல். இந்தவகையில் தமிழர் தாயகப் பகுதியில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்புப் பணிகளுக்கு முட்டுக் கட்டை போடுதலன்றி திசை திருப்பி விடுதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் அரசாங்கம் சர்வதேச ரீதியில் கிடைக்கப்பெறும் நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித் தொகைகள் என்பவற்றை தமிழ் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும். ஏற்கனவே ஜனாதிபதி சந்திரிகா விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியாரை அனுமதிப்பதில்லை எனவும் கொண்டு செல்லப்படும் நிவாரணப் பொருட்களை அனுப்பி விடுவதாகவும் பொய்யான பிரச்சாரம் ஒன்றை கட்டவிழ்த்து விட்டுள்ளனர். இது அவர் தமிழர் தாயகப் பகுதியைப் புறக்கணிப்புச் செய்வதற்கான முன்னறிவிப்பாகவே கொள்ளத்தக்கது.

இதே சமயம் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பி., எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசாங்கம், புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென யாழ்ப்பாணத்தில் வைத்து தெரிவித்த கருத்துக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. அதாவது தமிழ் மக்களுக்கு இயற்கையாக ஏற்பட்டு விட்ட பேர் அனர்த்தத்தின் போது கூட ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபடத் தயாராக இல்லை.

இத்தனைக்கும் அமெரிக்கரை ஏகாதிபத்திய வாதிகள், ஆக்கிரமிப்பாளர்கள், வெள்ளைத் தோல்க் காரர்கள் என வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்த்த ஜே.வி.பியினர் தற்பொழுது அமெரிக்க நிவாரணப் பணிகள் என்ற ரீதியில் தனது இராணுவத்தை அனுப்பி வைத்துள்ள நிலையிலும் அது குறித்து மௌனம் சாதிக்கின்றனர். கருத்துக்கூற மறுக்கின்றனர்.

அதாவது ஜனாதிபதி சந்திரிகாவும் சரி, அவரது கூட்டாளிகளான ஜே.வி.பியினரும்சரி, யாருடனும், சரி எவற்றுடனும்சரி தமது தேவை கருதி விட்டுக் கொடுப்புச் செய்யவும், மண்டியிடவும் தயாராக இருப்பினும் தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கவோ அன்றி, சேர்ந்து பணியாற்றவோ அன்றி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணவோ தயாராக இல்லை.

இந்நிலையில் வெளிநாடுகளினால் குவிக்கப்பட்டுள்ள பெருமளவு நிதி ஒரு புறத்தில் தென்னிலங்கைக்கும், ஒரு சிறு தொகுதி தமிழர் தாயகத்திலுள்ள தமிழர் அல்லாதவர்களுக்கும் என ஒதுக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இது அவர்களின் அரசியல் தேவைக்கானது. ஆனால் இவ்வொதுக்கீடுகளும் கூட அம்மக்களை முழுமையாகச் சென்றடையுமா? என்பது கேள்விக்குரியதே.

ஏற்கனவே உடனடி நிவாரணப் பொருட்கள் விநியோகத்தில் தென்னிலங்கை பெரும் முறைகேடுகள் இடம்பெற்றதாகவும் பெருமளவு பொருட்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும் பல அதிகாரிகள் பொருட்களை பெரும் பகுதிகளைச் சுருட்டிக் கொண்டு விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தகவல்கள் தமிழர் தரப்பால் வெளியிடப்பட்டவையும் அல்ல. ஆகையினால் எதிர்காலத்தில் பெரிய தொகை நிதி ஒதுக்கப்படுகையில் அதில் பெருமளவு நிதி மோசடிகளுக்கும் இடமுண்டு. ஏற்கனவே சிறிலங்காப் பொலிஸ்த்துறையும் மற்றும் நிதித்துறை ஊழல் மலிந்ததென பெயர்பெற்றிருக்கையில் இவ்வியற்கை அனர்த்தமானது சிறிலங்கா நிர்வாக அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அத்தகையதொரு பெயர் வாங்கும் பெரியதொரு வாய்ப்பை வழங்கியுள்ளது எனலாம்.

இவை ஒருபுறமிருக்க மனிதாபிமான ரீதியிலான உதவி என்ற ரீதியில் சிறிலங்கா வந்துள்ள வெளிநாட்டு இராணுவத்தினர் மீட்புப்பணி மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆனால் இவர்களின் இப்பணியானது தனியாக இவ்வியற்கை அனர்த்தத்தினால் இலங்கை மக்களுக்கு குறிப்பாக தென்னிலங்கை மக்களுக்கான உதவிகளை வழங்குவதா அன்றி இவ்வனர்த்தத்தினால் அழிவுற்றுள்ள சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பையும் கட்டி யெழுப்ப உதவி புரிவதா என்ற கேள்வியும் உள்ளது.

ஏனெனில் வெளிநாட்டு இராணுவத்தினரின் சில நடவடிக்கைகளும் சிறிலங்கா அரசாங்கத்தின் செயற்பாடுகளும் பொருத்திப் பார்க்கத்தக்கவையாகவே உள்ளன. எடுத்துக் காட்டாக மீட்புப் பணிக்கென வந்துள்ள சில இராணுவக் கடற்படைப் பிரிவுகள் அழிவுற்ற சிறிலங்கா கடற்படை மற்றும் இராணுவத் தளங்களிலும் மீட்புப் பணிகளிலும் புனரமைப்புப் பணிகளிலும் ஈடுபட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளன.


இதேவேளை ஜனாதிபதி சந்திரிகா புனர்வாழ்வுப் பணிகளுக்கான நடவடிக்கைகளை சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பிடம் ஒப்படைத்ததில் இருந்து வெளிநாட்டு இராணுவத்தினருடன் சிறிலங்கா இராணுவத்தினரும் இணைந்து செயலாற்றும் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்துள்ளார். இந்தவகையில் வெளிநாட்டினரின் நிவாரணப் பணி புனரமைப்பு உதவிகள் தமிழர் தரப்பிற்குக் கிட்டாத போதும் சிறிலங்கா ஆயுதப் படைக்கும் அது உரியதானதாகவே உள்ளது.

இத்தகையதொரு நிலையில் அதாவது ஒருபுறத்தில் வெளிநாட்டுக்கடன் சுமையிலிருந்து விடுதலை பெற்று வெளிநாட்டுச் செலாவணிக் கையிருப்பு சற்றே அதிகரித்த நிலையிலும் சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பும் வெளிநாட்டினரின் மீட்பு, நிவாரணப் பணி நடவடிக்கையின் மூலம் புனரமைக்கப்படும் நிலையும் உருவாகும் போது மறுபுறத்தில் சுனாமி அனர்த்தம் என்ற பேச்சும் படிப்படியாக குறைவடைந்து செல்லும் நிலையில் சிறிலங்கா அரசாங்கமும் மீண்டும் ஒரு போருக்கு தன்னைத் தயார் படுத்திக் கொண்டுவிடும். சுமார் 6 மாத காலத்தில் இத்தகையதொரு சூழ்நிலை உருவாகும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில் ஜனாதிபதி சந்திரிகா 6 மாத காலத்துக்குள் புனர்வாழ்வுப் பணிகள் முற்றுப் பெற்று விடும் என்கிறார். இந்த வகையில் சுனாமி அனர்த்தம்கூட சந்திரிகா குமாரதுங்க அரசிற்கு வாழ்வழித்துள்ளது என்றே கொள்ளலாம்.

------------ஜெயராஜ்




# முரளிக்கு வாழ்த்துக்கள்



விளையாட்டுத் துறை சார்ந்த அனைத்து நட்சத்திரங்களும் திறமையுடன் தமது துணைவியையும் அதற்குத் தகுந்ததாற்போல் தேடிக் கொள்கின்றார்கள்.

அதிலும் இலங்கையைரின் துணைவியர் தேடலில் சிறிலங்காவின் சுழல் சாதனையாளர் முரளி சற்று வித்தியாசம். என்ன வித்தியாசம் என்று யோசிப்பீர்கள்.

முரளி தனது துணைவியாரை எதிர் காலத்தில் சாதிக்கின்ற சாதனைகள் அனைத்துக்கும் துணை நிர்க்கப் போகிறவரை எங்கிருந்து தேர்தெடுக்கிறார் பார்த்தீர்களா? ஆம் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவருக்கும் தெரிந்த விடயம்.

அந்த விடயத்தினை ஈழநாதம் விளையாட்டுச் சுடரின் ஊடாக எம் ரசிகர்களுக்கும் விபரிக்கின்றோம்.

இந்தியாவின் பிரபல தொழில் அதிபரும், சென்னையில் உள்ள அடையார் மருத்துவமனையின் பணிப்பாளருமான மதிமலர் ராமமூர்த்தியையே தமது துணைவியாகத் தேடிப் பிடித்திருக்கிறார்.

சாதனையாளர் இவரது திருமணம் எதிர்வரும் மார்ச் மாதம் 21 ஆம் திகதி சென்னையில் கோலாகலமாக நடைபெற உள்ளது. எனது தாய் தந்தையின் விருப்பத்துடன் தான் நான் திருமணம் செய்து கொள்வேன் என்று கூறிவந்த முரளி அவ்வாறே தமது நெருங்கிய தொடர்புடைய நாட்டு மருமகளையே முரளியின் பெற்றோர் முரளிக்குப் பேசி தீர்த்திருக்கிறார்கள்.

கிரிக்கெட் போட்டிகளில் விக்கெட்டுக்களை மளமளவென சரிப்பவர் திருமணத்தின் பின் அவரது ராசி எவ்வாறு அமையும் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும் என ரசிகர்கள் தெரிவிக்கின்றனர்.

# உள்ளூர் விளையாட்டு வீரர்களும் ஒத்துழைப்பும்

சுனாமியின் பேரலைத் தாக்கத்திற்கு உட்பட்டு பாதிக்கப்பட்ட சமுகத்திற்கு தேசியவிளையாட்டு அணிகளின் வீரர்கள் பல நாடுகளிலும் ஒன்றிணைந்து விளையாடி பலகோடிகளை நிவாரண நிதிக்காக வழங்கி இருந்தாலும் அதை விட மேலான செயற்பாடுகளில் தற்போது உள்ளூர் விளையாட்டுக் கழக வீரர்கள் செய்து வருகின்றனர்.

அதாவது பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் துப்பரவு செய்யும் பணிகளிலும், மக்கள் மீள் குடியேறும் போது கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கும் பணிகளிலும் எமது பிரதேச விளையாட்டுக் கழகங்களின் அங்கத்தவர்கள்.(விளையாட் வீரர்கள்) ஒன்றாக நின்று இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அது மட்டுமன்றி சுனாமித் தாக்கம் ஏற்பட்ட வேளையிலும் கூட எமது உள்ளூர் விளையாட்டுக் கழக வீர்களே பல முகாம்களை நடாத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடி உலர் உணவுப் பொருட்களை வழங்கிவந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தேசிய அணிகளின் வீரர்கள் அங்கே பெரும் அளவு நிதிகளை திரட்டிக் கொடுக்க, இங்கே எமது பிரதேச வீரர்கள் சரீர உதவிகளைச் செய்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் ஒத்திவைப்பு

இலங்கையில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி மிகவும் பிரமாண்டமான முறையில் நடாத்தப்பட இருந்த தெற்காசிய நாடுகளுக்கான விளையாட்டப் போட்டிகள் சுனாமித் தாக்கத்தைத் தொடர்ந்து மேலும் ஒரு வருடம் ஒத்தி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், மாலைதீவு, வங்களாதேஸ், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட எட்டு நாடுகள் பங்குபற்றும். தெற்காசியப் போட்டிகள் மேற்படி நாடுகளில் சில வற்றில் ஏற்பட்ட பாரிய சுனாமித் தாக்கத்தின் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டத் துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்திருந்தார். அவர் மேலும் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகள் இப்பாதிப்பில் இருந்து மீள வேண்டும். அத்துடன் இன்னும் வீரர்களின் பயிற்சித் திறமையை விருத்தி செய்து கொண்டு இந்தப் பிரமாண்டமான நிகழ்வை இன்னும் சிறப்பிப்பார்கள்.

என்றும் அத்துடன் இந்தியா, மலைதீவு, இலங்கை, போன்ற நாடுகள் சுனாமியின் வடு நீங்கி ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போட்டியிட்டு வெல்லக் கூடிய திறமை அதிகளவு வளர்த்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தெற்காசிய வலய வீரர்களைப் பொறுத்தாவரை இன்னும் மேலதிகமான பயிற்சிகளைப் பெறக் கூடிய வாய்ப்பை இந்தச் சுனாமி வழங்கியுள்ளதா, அல்லது சற்ரேனும் வீரர்களுக்குப் பயிற்சியில் ஈடுபடும் சாத்தியம் குறைவடைய வாப்பை வழங்கி உள்ளதா? இந்த விளையாட்டு விழா பிற்போடல் என்பது விளங்காத புதிராகவே உள்ளது.

# நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஆசியக் கிண்ணம் பாக்-இந்தியா விருப்பம்



உலகக் கிண்ணக் கிரிக்கெட் மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளைப் போன்று அதிக கிரிக்கெட் ரசிகர்களை தன்னுள் கொண்டுள்ள மற்றுமொரு தொடர் ஆசியக் கிண்ணம் பல முறை பல பிரச்சினைகளைக் காரணம் காட்டி தட்டிக் களித்துக் கொண்டு வந்த ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி இப்போது துபாயில் நடைபெற்று வருகின்ற ஆசிய கிரிக் கெட் சபைக் கூட்டத்தில் 2006ல் பாகிஸ்தானில் நடைபெறும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. எனப் பாகிஸ்தான் கிரிக்கெட்ச் சபைத் தலைவர் சஹாரியார் கான் பாகிஸ்தானின் உள்ளூர் நாளிதழ்களுக்குத் தெரிவித்துள்ளார். இப்போட்டியில் பங்கேற்பதற்கு இதுவரைகாலமும் சச்சைகளை உண்டு பண்ணி வந்த பாகிஸ்தான் - இந்திய அணிகள் தமது இரண்டு நாடுகளுக்கு இடையில் தற்போது ஏற்பட்டுள்ள சுமுக நிலையை அடுத்து இப்போட்டியில் பங்கேற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன.

அத்துடன் இப்போட்டிகளில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், வங்களாதேஸ், நேபாளம், உள்ளிட்ட ஆசிய நாடுகள் இப்போட்டியில் விளையாடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளன.

அத்துடன் இறுதியாக ஆசியக் கிண்ணப் போட்டி கொழும்பில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து அடுத்து 2006 இல் பாகிஸ்தானில் நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச கிரிக்கெட் விதிகளில் மாற்றமா?

சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளின் விதிகளில் மாற்றங்கள் செய்வது குறித்து சர்வதேச கிரிக்கெட் பேரவை கவனம் செலுத்தி வருகிறது.

ஒரே பந்து வீச்சில் இரண்டு துடுப்பாட்ட வீரர் ஆட்டம் இழக்கும் முறையை அறிமுகப் படுத்துவதா? இல்லையா? என்பது குறித்து கிரிக்கெட் பேரவை ஆராய்ந்து வருகிறது.

துடுப்பெடுத்தாடுபவர் பிடிகொடுத்து அல்லது விக்கெட்டை மறைத்து நின்று காலில் பட்ட குற்றத்துக்காவேனும் ஆட்டமிழக்கும் போது மறு முனையில் துடுப்பாட் வீரரும் ஆட்டமிழக்கச் செய்யக் கூடிய வழிமுறையை நடைமுறைப் படுத்தலாமா? என்ற யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனை சாத்தியப் படக் கூடியது. என பேரவையின் கிரிக்கெட் சபைத் தலைவரும் இந்தியாவின் முன்னாள் அணித் தலவருமான சுனில் கபாஸ்கார் கூறியுள்ளார். எல்.வீ.டபிள்யூ முறையில் துடுப்பாட்ட வீரர் ஒருவர் ஆட்டமிழக்கும் சந்தர்ப்பத்தில் முன் நோக்கிச் செல்லும் பந்தை எடுத்து களத் தடுப்பாளர் மறு முனையில் உள்ள விக்கெட்டைச் சரித்தால் ரன் அவுட் முறையில் ஆட்டமிழப்பார்.

அதே போன்று துடுப்பாட்ட வீரர் ஒருவர் பிடிகொடுத்து ஆட்டமிழந்தால் இதே போன்ற முடிவு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு என கவாஸ்கார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவுரேலியாவின் மெல்போனில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் பேரவைக் கூட்டத்தில் ஆராயப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சூப்ப சீரிஸ் புதிய தொடர் அறிமுகம்



சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் டெஸ்ட் போட்டி மற்றும் ஒரு நாள் போட்டிகளில் முதலிடம் பிடிக்கும் அணிகளுக்கும், உலக தெரிவு (11 பேர்) அணிக்குமான போட்டிகளை நடாத்த (ஐ.சி.சி) முடிவு செய்திருக்கின்றது. இப்போட்டிகளானது மூன்று ஒரு நாள் போட்டியும், ஒரு டெஸ்ட் போட்டியும் வருகின்ற ஒக்டோபர் மாதம் ஆரம்பப் பகுதியில் நடாத்துவதற்கு ஐ.சி.சி திட்டமிட்டுள்ளது.

சர்வதேசப் போட்டிகளில் அணிகளின் தர வரிசைப் படுத்தலில் முதலிடம் பெறுகின்ற அணியினருக்கும் தேர்வு செய்யப்படுகின்ற உலக அணியினருக்குமான போட்டிகளாக இவை அமையவுள்ளது.

இந்த உலக லெவன் அணியினரின் தேர்வுக் குழுத் தலைவராக இந்திய அணியின் முன்னாள் தலைவர் சுனில் கபாஸ்கார், ஐ.சி.சி.யினரால் தேர்வு செய்யப்பட்டுள்ளபோதும் இவருடன் சிறிலங்கா அணியின் முன்னாள் உப தலைவர் அரவிந்த டீசில்வா, ரிச்சட் ஹார்ட்லி, இளைவொயிட், ஜொட்டி ரோட்ஸ், மைக் ஆதட்ர்ட்டர் போன்றோர் இடம் பிடித்துள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட இருக்கிற உலக கிரிக்கெட் அணியினர் எவ்வாறு தெரிவு செய்யப்பட போகிறார்கள் தெரியுமா? எதிர்வரும் ஏப்ரல் மாதம் அளவில் உலக லெவன் அணியில் 30 பேர் கொண்ட பேர் விபரத்தினை ஐ.சி.சி இவர்களிடம் சமர்ப்பிக்கும் அதில் இருந்து நடக்கின்ற அடுத்த போட்டிகளில் மிகவும் சிறப்பாக பிரகாசிக்கின்ற வீரர்கள் 20 பேரை இவர்கள் தெரிவு செய்வர்.

இந்த 20 வீரர்களுள் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் விளையாடக் கூடியவாறே இந்த தெரிவு அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படியான போட்டடிகளுக்கு சர்வதேச அந்தஸ்த்து வழங்குவது தொடர்பாக இன்னும் உத்தேசிக்கப்படவில்லை. அது மட்டுமன்றி டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் அண்மைக் காலமாகத் தொடர்ந்து அவுஸ்ரேலிய அணியினரே முதலிடத்தில் உள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை - நியூசிலாந்து ஏப்ரலில் மோதல்

கிரிக்கெட் விளையாட்டு ரசிகர்களால் பெரிதும் எதிர் பார்க்கப்பட்டிருந்த இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக நடைபெறவுள்ள இரண்டு டெஸ்ட் போட்டிக்கான கால அட்டவணையை நியூசிலாந்து கிரிக்கெட் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அந்த வகையில் இவ்விரு அணிகளுக்குமான முதலாவது டெஸ்ட் ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி தொடக்கம் 08 ஆம் திகதி வரை நேபியரில் நடைபெற உள்ளது.

இரண்டாவது டெஸ்ட் போட்டி வெலிங்டனில் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. அத்துடன் இலங்கை அணியினர் முரளியின் திருமணத்தைத் தொடர்து மார்ச் 25 இல் நியூசிலாந்து போய்ச் சேர்கிறது.

அதனைத் தொடர்ந்து உடனடியாகப் பயிற்சிப் போட்டி ஒன்றில் பங்கேற்கிறது. அத்துடன் 28, 29, 30 ஆகிய தினங்களிலே இந்த முதற் தரப் போட்டிகள் நடைபெற உள்ளது.

ஏக்கனவே இலங்கை அணியினர் நியூசிலாந்து அணியுடன் ஒரு நாள் போட்டி ஒன்றில் பங்கு பற்றி இருந்தனர் அப்போட்டியினைத் தொடர்ந்து நாடு திரும்பியது. இலங்கை அணி என்பது குறிப்பிடத்தக்கது.

# நிருவாக சபைக் கூட்டம்

மண்முனை தென் எருவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கான புனரமைப்புக் கூட்டம் விளையாட்டுக் கழகங்களில் நிறைவுற்றுப் புதிய ஆண்டுக்கான நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கெனடி விளையாட்டுக் கழகத்தின் புதிய நிருவாக சபையினரின் முதலாவது கூட்டம் கடந்த மார்கழி மாதம் இடம் பெற இருந்தது. தவிர்க்க முடியாத காரணத்தினால் கைவிடப்பட்ட நிருவாக சபைக் கூட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் முதற் கிழமையில் நடைபெறும் என அதன் செயலாளர் தெரிவித்தார். எனவே அனைத்து கழகத்தின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளுமாறு அன்பாக அழைக்கின்றோம்.

# மன்னரின் அழைப்பை ஏற்று பேச்சுக்கு வாருங்கள்; மாவோயிஸ்ட்களுக்கு எச்சரிக்கை

(காத்மாண்டு)

'மன்னரின் அழைப்பை ஏற்று பேச்சுவார்த்தைக்குத் திரும்பாவிட்டால் மாவோயிஸ்ட்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என இராணுவ தளபதி பியார் ஜுங் தாபா எச்சரித்தார். நேபாளத்தில் பிரதமர் ஷெர் பகதூர் தாபா ஆட்சி பதவி நீக்கம் செய்யப்பட்டு நெருக்கடி நிலை பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது.

ஆட்சிக்கு ஆலோசனை கூற 10 உறுப்பினர்கள் அமைச்சரவையில் நியமிக்கப்பட்டு இருக்கின்றது. அங்கு சீன பாணியில் கம்யூனிஸ்ட் அரசை நிறுவ மாவோயிஸ்ட்கள் போராடி வருகின்றனர். 1996ம் ஆண்டுக்குப் பிறகு இவர்களின் வன்முறைக்கு 11 ஆயிரம் பேர் இதுவரை பலியாகி உள்ளனர்.






தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சி இல்லாததால் மன்னருடனோ அல்லது அவரது நேரடி பிரதிநிதியுடன் மட்டுமே பேச்சு நடத்துவோம் என மாவோயிஸ்ட்கள் இதுவரை கூறினர். தற்போது ஷெர் பகதூர் தாபாவின் ஆட்சியை மன்னர் ஞானேந்திரா பதவி நீக்கம் செய்ததற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர்.

இதுகுறித்து இராணுவத் தளபதி பியார் ஜுங் தாபா கூறியதாவது: மன்னரின் அழைப்பை ஏற்று மாவோயிஸ்ட்டுகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட வேண்டும். அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் சம்மதிக்க வேண்டும். தவறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். மாவோயிஸ்ட்டுகளின் பலத்தை குறைத்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கண்டால் நேபாள வரலாற்றில் இராணுவத்தின் பெயர் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படும்.

நேபாளத்தில் நெருக்கடி நிலை அமுலுக்கு வந்த பிறகு இராணுவத்துடன் நடந்த மோதலில் ஐந்து மாவோயிஸ்ட்டுகள் கொல்லப்பட்டனர். பல இடங்களில் மாவோயிஸ்ட்கள் குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இதில் யாருக்கும் காயமில்லை. இவ்வாறு தளபதி பியார் ஜுங் தாபா கூறினார்.

நேபாளத்தில் நெருக்கடி நிலை அமுலில் இருப்பதால் சிக்கிம் எல்லையில் கண்காணிப்பு தீவிரமாகி உள்ளது. நேபாளம், சிக்கிம் இடையே 110 கி. மீ. , நீள எல்லைப்பகுதி உள்ளது. இந்த வழியாகத் தீவிரவாதிகள் நேபாளத்தில் இருந்து ஊடுருவலாம் என்ற அச்சம் உள்ளது.

அதைத் தடுக்க எல்லா பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தர விட்டு இருப்பதாக சிக்கிம் சட்டம் ஒழுங்கு ஐ. ஜி. ,எஸ். டி. நேகி தெரிவித்தார். குறிப்பாக ரங்போ சோதனைச் சாவடியில் கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டு இருக்கின்றது. தனிப்படை பொலிசார் மற்றும் சுற்றுலாத்துறை அதிகாரிகள் கூட்டாக இப்பணியில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கானிஸ்தானில் பனி மூட்டத்தில் பயணிகள் விமானம் சிக்கி 104 பேர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பனிமூட்டத்தில் சிக்கி பயணிகள் விமானம் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 104 பேர் பலியாயினர்.





ஆப்கானிஸ்தானில் ஹெராத்திலிருந்து காபூல் நோக்கி நேற்று முன்தினம் புறப்பட்ட விமானம் ரேடார் சிக்னலில் இருந்து மறைந்தது. இந்த விமானத்தில் பயணித்த 104 பேரின் கதி என்னவானது என்பது தெரியவில்லை. இதற்கிடையே, காபூலின் கிழக்கு பகுதியில் விமானம் நொறுங்கிக் கிடந்தது நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. இதிலிருந்த 104 பேரும் பலியாயினர். கடும் பனிப் பொழிவு காரணமாக மீட்புப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

## விபச்சார வழக்கில் ஜெயலட்சுமி பிணை வழங்கியமை குறித்து விசாரணை

(மதுரை)

விபச்சார வழக்கில் கைதான ஜெயலட்சுமியை பிணையில் எடுத்தது தொடர்பாக நெல்லை மாவட்ட அ. தி.மு.க. செயலாளர் சுதா பரமசிவத்திடம் சி.பி.ஐ, அதிகாரிகள் விசாரணை நடத்தினர்.

மூன்றாண்டுகளுக்கு முன், விபச்சார வழக்கில் கைதான ஜெயலட்சுமியை பிணையில் எடுக்க நெல்லை மாவட்ட அ.தி.மு.க. செயலாளர் சுதா பரமசிவம் மற்றும் சிலர் உதவி செய்ததாக வக்கீல் குமாஸ்தா ராஜாமணி , முருகன் உட்பட மூவர் ஏற்கனவே சி.பி.ஐ. , விசாரணையின் போது கூறினர். அவர்கள் கொடுத்த மனுவில் கூறியிருந்ததாவது:

நெல்லை நகர் பொலிசார் ஜெயலட்சுமியை விபச்சார வழக்கில் கைது செய்த போது தனது பெயரை ஜெயலட்சுமி என்றும் உமா என்றும், கிருஷ்ணன் மனைவி என்றும் கூறியிருந்தார். அவரை பிணையில் எடுக்க முருகன் என்பவரிடம் ரூ. 3 ஆயிரத்தை நெல்லை மாவட்ட அ. தி. மு. க. , செயலாளர் சுதா பரமசிவம் கொடுத்தார். அதை வைத்து அவரைப் பிணையில் எடுத்தோம். கொக்கிரகுளம் சப் சிறையிலிருந்து ஜெயலட்சுமி வெளியே வந்ததும், சுதா பரமசிவத்தின் காரில் ஜெயலட்சுமியை அழைத்துச் சென்றனர். அப்போது சர்க்யூட் ஹவுசில் அ. தி. மு. க. , அமைச்சர் தளவாய் சுந்தரம் இருந்தார். அங்கு சென்றபோது, பிணையில் எடுத்ததற்காக எங்களுக்கு தலா ரூ. 500 ஐ அமைச்சர் தந்தார். அங்கிருந்த அமைச்சர், அ. தி.மு.க. , மாவட்ட செயலாளர், மாவட்ட இளைஞரணி செயலாளர் சங்கரலிங்கம் மற்றும் பிரமுகர்கள் ஜெயலட்சுமியுடன் குற்றாலம் போவதாகச் சொல்லிவிட்டு சென்றனர்.

அதன்பின் போடப்பட்ட வாய்தாவிற்கு ஜெயலட்சுமி நீதிமன்றுக்கு வரவில்லை. அதன் பிறகு ஜெயலட்சுமி மீதான வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த வழக்குத் தொடர்பாகப் பொலிசார் எங்களிடம் விசாரணை நடத்தினர்.

உண்மையை சொல்லாவிட்டால் எங்களுக்கு ஆபத்து என்று கருதி 'அபிடவிட்' தயார் செய்தோம். அதை சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு அனுப்பவும் ஏற்பாடு செய்தோம். இந்த விபரம் அ. தி. மு. க. ,வினருக்குத் தெரிந்து 'அபிடவிட்டை' அனுப்ப விடாமல் செய்து விட்டனர் எனத் தெரிவித்தார்.

## எகிப்தில் உலகநாடுகள் கவனம் திரும்பியுள்ளது

எகிப்தில் யுரேனியம் மற்றும் அதனுடன் சம்மந்தமான மூலப்பொருட்கள் பற்றிய ஆய்வுகளை விஞ்ஞானிகள் ஆய்வு செய்து வந்ததை அடுத்து எகிப்தில் உலக நாடுகளின் கவனம் திரும்பியுள்ளது.

இதில் விசாரணைக்குட்பட்ட எகிப்திய அனுசக்தி நிபுணர்கள் வெளியிட்ட அறிக்கை இம்மாத இறுதியில் சமர்ப்பிக்க இருக்கின்றனர். இந்த அறிக்கையில் பங்குபற்றவுள்ள 35 நாடுகளின் ஆளுனர் சபை எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது. அதன் பின்னரே எகிப்து தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# உலக செய்திகள்

## ஈராக் எண்ணெய் திட்ட ஊழல் ஐ.நா. செயலர் நடவடிக்கை



ஐ. நா. :ஈராக்கிற்கான உணவுக்கு எண்ணெய் திட்டத்தின் தலைவர் பெருமளவில் இலஞ்சம் பெற்றதாகவும், தனக்கு வேண்டிய நிறுவனங்களுக்கு எண்ணெய் ஒதுக்கீடு செய்ததாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

குவைத் மீது கடந்த 1990ல் ஈராக் படை எடுத்தது. இதற்காக, ஈராக் மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டது. ஈராக் மக்களின் நலனுக்காக, உணவுக்கு எண்ணெய் திட்டத்தை ஐ.நா., அனுமதித்தது.1996 முதல் 2003 வரை, ஐ. நா., கண்காணிப்பில் இந்த திட்டம் செயல்பட்டது. இதற்காக அமைக்கப்பட்ட குழுவுக்குப் பெனன் செவன் தலைவராக இருந்தார்.




இத்திட்டத்தில் முறைகேடுகள் நடந்ததாக குற்றச் சாட்டுகள் எழுந்தன.

அமெரிக்க பெடரல் வங்கியின் முன்னாள் த லைவர் பால்வோல்கர் தலைமையிலான குழு, இந்த முறைகேடு குறித்து விசாரிக்க அமைக்கப்பட்டது. இக்குழு நேற்று முன் தினம் தனது இடைக்கால அறிக்கையை அளித்தது. 219 பக்கங்கள் கொண்ட அந்த அறிக்கை, திட்டத்தின் தலைவர் மற்றும் பல்வேறு ஐ. நா. , அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டை சுமத்தியுள்ளது.

குறிப்பாக, இத்திட்டத்தில் சலுகை காட்ட ஏராளமான பணத்தை லஞ்சமாக பெற்றிருப்பதாக பெனன் செவன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. செல்வாக்கைப் பயன்படுத்தி தனக்கு வேண்டிய கம்பெனிகளுக்கு குறைந்த விலையில் எண்ணெய் சப்ளை செய்ய ஏற்பாடு செய்ததாகவும் பெனன் செவன் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

விசாரணை மேலும் தொடர்கின்றது. இது இடைக்கால அறிக்கை தான். முழு விசாரணையில் மேலும் பல உண்மைகள் தெரியவரும் என்று வோல்கர் தெரிவித்தார். அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைப் பெனன் செவன் மறுத்துள்ளார். இந்நிலையில், பெனன் செவன் உட்பட முறைகேடு செய்த அனைத்து ஐ. நா., அதிகாரிகள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க ஐ.நா. பொதுச் செயலாளர் கொபி அனான் முடிவு செய்துள்ளார்.

## அலைகள் நடிகர் செல்வக்குமார் மரணம்

(சென்னை)

நடிகர் அலைகள் செல்வக்குமார் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் இறந்தார். அவருக்கு வயது 65.


தமிழ்த் திரையுலகில் அலைகள் படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானவர் செல்வக்குமார். அலைகள் படத்தில் முதலில் அறிமுகமானதால் இப்பெயரையும் தனது பெயருடன் சேர்த்து அலைகள் செல்வக்குமார் என்று வைத்துக் கொண்டார்.

நூறு படங்களில் குணசி த்திர வேடங்களில் நடித்துள்ள இவர் தொலைக்காட்சி தொடர்களிலும் நடித்துள்ளார். தென்னிந்திய நடிகர் சங்கத்தில் 14 ஆண்டுகள் பொருளாளராகவும் இருந்துள்ளார். சென்னை சூளைமேட்டில் சவுராஷ்டிரா தெருவில் உள்ள வீட்டில் நேற்று இரவு தூங்கிக் கொண்டிருந்தபோது திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டு இறந்தார்.

இவரது உடலுக்குத் தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் விஜயகாநத், துணைத் தலைவர் நெப்போலியன், பொருளாளர் கே. என். காளை ஆகியோர் மலர் அஞ்சலி செலுத்தினர்.

செல்வக்குமாரின் இறுதிச் சடங்கு நேற்று காலை தி. நகரில் உள்ள கண்ணம்மா பேட்டையில் நடந்தது. இறந்த செல்வக்குமாருக்கு பத்மினி என்ற மனைவியும், பூர்ணிமா, பானுப்பிரியா, நிஷாந்தி ஆகிய மகள்களும் உள்ளனர்.

## மருத்துவ மனையிலிருந்தபடியே வாராந்திர கூட்டத்தில் பேசுவதற்கு ஏற்பாடு



(ரோம்:ப்)

காய்ச்சல் மற்றும் சுவாசப் பிரச்சினையால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள போப் இரண்டாம் ஜான் பால், எதிர்வரும் வாராந்திரக் கூட்டத்தில் பேசுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

எண்பத்து நான்கு வயது நிரம்பிய போப் இரண்டாம் ஜான் பால்,ப்; காய்ச்சல் காரணமாகக் கடந்த சில நாட்களுக்கு முன் வாட்டிகன் நகரில் உள்ள ஜெமிலி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். போப் ஜான் பாலின் தகவல் தொடர்பாளர் ஜாக்குயின் நவர்ரோ வால்ஸ் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசுகையில், போப் நேற்று முன்தினம் இரவு நன்றாகத் தூங்கினார். அவர் உடல் நிலையில் குறிப்பிடத்தக்க பிரச்சினை ஏதும் ஏற்படவில்லை..

இன்னும் ஒரு வாரத்திற்கு அவர் மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டும் எனக் கூறினார். வரும் ஞாயிறன்று நடைபெற உள்ள இவரது வாராந்திர உரையை மருத்துவ மனையில் இருந்தபடியே மைக் மூலமாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றது

# துலீப் டிராபி கிரிக்கெட்

## கங்குலி – சேவக் அணிகள் மோதல்



துலீப் டிராபி போட்டியில் கங்குலி, சேவக் தலைமையிலான அணிகள் மோதுகின்றன.

மண்டல அளவிலான துலீப் டிராபி கிரிக்கெட் போட்டி எதிர் வரும் 14 திகதி தொடக்கம் 18 வரை ராஜஸ் தான் மாநிலம் பிகானேரில் நடக்கிறது.

இதில் கங்குலி தலைமையில் களமிறங்கும் கிழக்கு மண்டல அணியில் ரோகன் கவாஸ்கர், லட்சுமி ரத்தன் சுக்லா, தோனி போன்ற முன்னணி வீரர்கள் இடம் பெற்றுள்ளனர். இந்திய அணியின் பெரும்பால நட்சத்திர வீரர்கள் சேவக்கின் வட



க்கு மண்டல அணியில் காணப்படுகின்றனர். இந்த அணியில் தினேஸ் மோங்கியா, கவுதம் காம்பிர், யுவராஜ் சிங், ஹர்பஜன் சிங் போன்ற பிரபலங்கள் உள்ளனர். இவ்விரு அணிகளுக்கு இடையிலான சுவாரஸ்ய மோதலில் சிறப்பாக செயல்படும் இளம் வீரர்கள் பாகிஸ்தான் தொடருக்கு தேர்வு செய்யப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

**இரு அணிகளும் வருமாறு:**

கிழக்கு மண்டலம்: கங்குலி (தலைவர்), லட்சுமி ரத்தன் சுக்லா (துணை தலைவர்), ரோகன் கவாஸ்கர், அரிந்தம் தாஸ், சஞ்சிப் சன்யால், ஷிப் சங்கர் சன்யால், ரனதிப் போஸ், எஸ். எஸ். தாஸ், சஞ்சய் சத்பதி, தீபக் மங்கராஜ், ஜெயசந்திரான்(ஒரிசா வீரர்கள்), தோனி, ஷகிர் கான், சதிஷ், சுஜித் ராய்.

**வடக்கு மண்டலம்:**

சேவக் (தலைவர்), தினேஷ மோங்கியா (துணை தலைவர்), கவுதம் காம்பிர், ஆகாஷ் சோப்ரா, ரவ் னித் ரிக்கி, யுவராஜ் சிங், சங்ராம் சிங், பிஸ்லா, ஆசிஷ நெக்ரா, கன்திப் சிங், அமித் பண்டாரி, ஜோகிந்தர் சா்மா, அமித் மிஸ்ரா, ஹர்பஜன் சிங், பங்கஜ் தர்மானி.

## இந்தியப் பயணத்தில் பங்கேற்க மாட்டோம்;

### அக்தரை அணியில் சேர்க்க பாக். வீரர்கள் எதிர்ப்பு

இந்திய சுற்றுப்பயணத்தில் அக்தருக்கு வாய்ப்பு அளிக்கக் கூடாது என பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த முன்னணி வீரர்கள் போர்க்கொடி தூக்கி உள்ளனர். இதனால் பெரும் குழப்பத்தில் தவிர்க்கிறது பாக்., கிரிக்கெட் சபை..

ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் என அழைக்கப்படும் சோயப் அக்தர் மேலும் ஒரு சிக்கலில் சிக்கி உள்ளார். இவரை இந்திய சுற்றுப்பயணத்திற்கான பாக்., அணியில் சேர்க்க கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. தலைவர் இன்சமாம் உல்ஹக், துணைக் தலைவர் யூசுப் யோகானா, சல்மான்பட், அப்ரிடி, ரசாக், யூனிஸ், ரானா நவீட் உல் ஹசன் போன்ற முன்னணி வீரர்கள் அக்தரை அணியிலிருந்து நீக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

இவருக்கு இந்திய தொடருக்கான அணியில் வாய்ப்பு அளித்தால் இந்த பயணத்தையும், நடந்து கொண்டிருக்கும் முத்தரப்பு தொடரையும் புறக்கணிக்கப் போவதாக தெரிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பு பாகிஸ்தானில் வெளியாகும் திநேஹன்ஹ பத்திரிகையில் வெளியாகி உள்ளது. அக்தர் இல்லாத நிலையிலும் பாகிஸ்தான் அணி சிறப்பாக செயல்படுவதாக இவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இந்த விவகாரத்தை மூடி மறைக்கிறது. சபையின் செய்தி தொடர்பாளர் அப்பாஸ் ஜைதி இது பற்றி கூறுகையில், நாட்டு நலன் கருதி வீரர்கள் ஒற்றுமையுடன் தான் இருந்து வருகின்றனர். இதில் எந்தக் குழப்பமும் இல்லை என்கிறார்.

ஜைதி மழுப்பினாலும் அக்தர் பற்றி ஒவ்வொரு நாளும் பல்வேறு வதந்திகள் கிளம்பிய வண்ணம் உள்ளன. ஆஸ்திரேலிய பெண் எழுப்பிய கற்பழிப்பு புகார் காரணமாகவே இவர் தொடரின் பாதியிலே திருப்பி அழைக்கப்பட்டார் என்று செய்திகள் வெளியாயின. இதை மறுத்த சபைத் தலைவர் ஹரியார்கான் உடல் தகுதியின்மையால்தான் இவர் நாடு திரும்பியதாக கூறினார்.




## சைமண்ட்ஸ் விளாசல் ஆஸி. வெற்றி

முத்தரப்புதொடரின் முதலாவது இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தானை 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. அவுஸ்திரேலியாவில் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் மேற்கு இந்தியத்தீவு வெளியேற, அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேறின. மூன்று போட்டிகள் கொண்ட இறுதிச் சுற்றின், முதலாவது போட்டி நேற்று முன்தினம் மெல்போர்னில் நடந்தது.

நாணயச் சுழற்சி வென்ற அவுஸ்திரேலியா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. டாப் ஆர்டர் அப்படியே சரிந்தது. அனுபவ ஹைடனுக்குப் பதிலாக இடம் பெற்ற மைக்கேல் கிளார்க் 9 ஓட்டங்கள் வெளியேறினார். கில்கிறிஸ்ட் 24, தலைவர் பொண்டிங் 9 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, அஸ்திரேலியா 3 விக்கெட் இழப்புக்கு 53 ஓட்டங்கள் எடுத்து தவித்தது. இந்தச் சூழலில் மார்ட்டின், சைமண்ட்ஸ் இணைந்து அணியை மீட்டனர். இவர்கள் நான்காவது விக்கெட்டுக்கு 137 ஓட்டங்கள் சேர்த்தனர்.

அப்ரிடி சுழலில் மார்ட்டின் (53) ஆட்டமிழந்தார்.. அடுத்து பந்தில் லேமன் ஆட்டமிழந்தார். இருப்பினும் கேடிச் (9) தாக்குப்பிடிக்க, அப்ரிதியின் ஹாட்ரிக் கனவு தகர்ந்தது. இதே போல் ரசாக்கும் ஹாட்ரிக் வாய்ப்பை நழுவ விட்டார். இவர் கேடிச், சைமண்ட்சை அடுத்தடுத்த பந்தில் ஆட்டமிழந்தார். சிறப்பாகத் துடுப்பாடிய சைமண்ட்ஸ் 7 பவுண்டரிகளுடன் 91 ஓட்டங்கள் விளாசினார். இறுதியில் அவுஸ்திரேலிய அணி 49 ஓவரில் 237 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

பாகிஸ்தான் தரப்பில் ரசாக் 3, நவீத் உல்ஹசன் 2, அப்ரிடி 2 விக்கெட் வீழ்த்தினர். பின்னர் எளிய இலக்கை விரட்டிய பாகிஸ்தானுக்கு அவுஸ்திரேலிய வேகங்கள் அதிர்ச்சி தந்தன. மணிக்கு 150 கி. மீ. , வேகத்தில் வீசிய பிரட் லீ பந்தில் சல்மான்பட் (0), அனுபவ யோகன்னா (2) ஆட்டமிழந்தார். இன்சமாம்(51), சோயப் மாலிக் (66) இணைந்து வெற்றிக்காகப் போராடினர். கடைசி கட்டத்தில் ரசாக்(3), அப்ரிதி(26) கைகொடுக்கத் தவற, வெற்றி இலக்கை எட்ட இயலவில்லை. பாகிஸ்தான் அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 219 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது. ஆட்ட நாயகனாக சைமண்ட்ஸ் தேர்வு செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் தனது 200வது போட்டியில் விளையாடிய அவுஸ்திரேலியாவின் மெக்ராத் 300 விக்கெட் என்ற மைல்கல்லை எட்டி மகிழ்ந்தார். இவர் முகமது பீசை வெளியேற்றிய போது இச்சாதனை நிகழ்த்தினார். இதன் மூலம் ஒரு நாள் கிரிக்கெட் அரங்கில் 300 விக்கெட் வீழ்த்தும் 8வது வீரர் என்ற பெருமையும் பெற்றார் மெக்ராத்.




இயற்கையின் கோரத்தாண்டவத்தால் அழிந்து போயுள்ள எமது துயரத்தில் இன்னலுற்றிருக்கும் எமது உறவுகளின் குரலிது.

எம்முறவுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் என்பவற்றை தாங்கி தினமும் வெளிவருகின்றது.

நீங்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், உடனடித் தேவைகள் என்பவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும். மேலும் நீங்கள் எமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்பும் தகவல்கள், தெரிவிக்க விரும்பும் செய்திகள் என்பவற்றையும் எமக்கு அறியத்தரலாம் முடிந்தவரை அவற்றை வெளிக்கொணர்ந்து தீர்வு காண முயற்சிப்போம்.

## கேஹனியைக் காணவில்லை தகவல் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்க.

வட்ட விதானை வீதி, கல்முனை இரண்டைச் சேர்ந்த ஜெயராஜா கேஹனி வயது-6 என்பவரை கடலனர்த்தம் நடந்த 26.12.2004 அன்று கல்முனை மாமாங்க வித்தியாலயத்தில் இடம் பெற்ற அறநெறி கற்கை நெறிக்குச் சென்ற போது காணாமல் போயுள்ளார்.

கேஹனி பற்றிய தகவல் அறிந்தோர் 0777295106, 067-2220260 (சிங்கர் கொம்பனி, கல்முனை) எனும் தொலை பேசி இலக்கங்களுடனோ அல்லது எஸ். ஜெயராஜா, வட்டவிதானை வீதி, கல்முனை-2 எனும் முகவரியுடன் தொடர்புகொண்டு அறியத்தரவும்.

## கண்டெடுத்தவர்கள் மண்டூர் ஆலயத்தில் ஒப்படைக்கவும்

எனது கந்தோர் "விறீவ்கேஸ்" 2.2.2005 அன்று பின்னேரம் ஒருமணியளவில் களுவாஞ்சிகுடி நீர் பாசன திணைக்களத்தில் இருந்து வரும் வழியில் வெல்லாவெளிப் பாலத்திற்கும் மண்டூருக்குமிடையில் உள்ள றோட்டில் விழுந்து விட்டது. வெல்லாவெளிப் பாலம் கடந்து வரும் பொழுது "கோஸ்வே"யில் ஒரு நீல நிற நெல் ஏற்றி வந்த ரிப்பரை விலகி முந்திக்கொண்டு வந்தேன். விறீவ் கேஸ்சை எனது மோட்டார் சைக்கிளின் பின்னால் வைத்துக் கட்டியிருந்தேன்.

இதனுள்:-

1. டயரி, பென்சன் காட், எனது மழைக்கோட் முதலியன உள்ளடங்கப்பட்டிருந்தன. இதனைக் கண்டெடுத்தவர்கள் மண்டூர் ஆலயத்தில் ஒப்படைக்கவும்

திரு. பூபாலபிள்ளை சமாதான நீதவான்.

## இவர்களைக் காணவில்லை --

### தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

சுனாமி அனர்த்தம் காரணமாக 26.12.2004 இல் இருந்து கடற்கரை வீதி, விஷ்ணுபுரம், கல்முனை என்ற முகவரியில் வசித்த மாமாங்கேஸ்வரன் ஹர்ஷனா (வயது-5), மாமாங்கேஸ்வரன் தரணியா (வயது-3) ஆகிய இருவரையும் காணவில்லை என்றும் இந்த இரு குழந்தைகளின் தாயாரான மாமாங்கேஸ்வரன் கலைவாணி என்பவர் கடல் அனர்த்தத் தாக்கத்தினால் உயிரிழந்து விட்டார் என்றும், சம்பவ தினத்தன்று ஹர்ஷனா, தரணியா ஆகிய இரு சிறுமிகளும் ஓடி வந்ததைப் பலர் பார்த்ததாகவும் அவர்களது உறவினர்கள் ஈழநாதத்திற்கு தெரிவிக்கின்றனர்.

இவர்கள் பற்றிய தகவல் தெரிந்தோர் திரு. எம். மனோகரன் ஆர்.கே.எம். வீதி (இராமக்கிருஸ்ண மிஷன் பாடசாலைக்கு அருகில்) கல்முனை-2 என்ற முகவரியுடனோ அல்லது 065.2220043 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

## களுதாவளை வீதிகளின் அவல நிலை

கடந்த காலங்களில் பெய்த கடுமழை காரணமாகவும், சுனாமி கடல் நீரின் பரவியதன் காரணமாகவும் களுதாவளை உள்ளூர் வீதிகள் பல பலத்த சேதமடைந்துள்ளன. தற்போது களுதாவளை வன்னியார் வீதி, பெருமளவு மக்கள் தினமும் தமது பாவனைக்காக பயன்படுத்துகின்ற ஒரு பெரிய வீதி அத்துடன் இவ்வீதி பற்றி பலமுறை வீதி அபிவிருத்திக் குழுவிடம் முறைப்பாடு செய்தும் இது சம்மந்தமாக எவரும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அப்பகுதி மக்கள் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

## களுதாவளைப் பிரதேச விவசாயிகளுக்கு விமோசனம் கிடையாதா?

சுனாமி கடல் அனர்த்தம் ஏற்பட்டு பல விவசாயச் செய்கையாளரது பயிர்கள் மட்டு மல்லாது அவர்களுடைய நீர் இறைக்கும் இயந்திரங்களையும் அடித்துச் சென்று விட்டது.

பாதிக்கப்பட்ட மக்கள் தற்போது மீள் குடியமர்த்தப்பட்டு தமது இயல்பு வாழ்க்கைக்கு மெல்ல மெல்லத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தின் கரையோரப் பிரதேசங்களில் விவசாயச் செய்கையிலீடுபட்ட மக்கள் தொடர்ந்தும் தமது விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்கள் கட்டாயத் தேவையாக உள்ளது.

நிவாரணக் கொடுப்பனவுகளில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட போது விவசாயிகளின் பாதிப்பு சம்மந்தமாக பதிவு செய்திருந்தாலும் கடனுதவிகள் அரசாலோ, அல்லது வேறு பல அமைப்புக்களாலோ விவசாயத் துறையினூடாக பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு எந்தவிதமான உதவிகளும் இது வரை காலமும் வழங்கப்படவில்லை என்றும் இப்படியான உதவிகளை பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க முடியாமல் விட்டால் வேள்ட்விசன், யுனிசெப் போன்ற சமூக நல அபிவிருத்தி அமைப்புகளிடமாவது வேண்டுகோள் விடுக்கும்பட்சத்தில் அவர்கள் தமது வாழ்க்கைக் குவழியமைத்து தருவார்கள் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தங்களது ஆழ்ந்த மனத்தாக்கத்தை தெளிவுபடுத்தியதுடன இதுவரை எந்த ஒரு அரச அதிகாரிக ளோ இது சம்மந்தமான நடவடிக்கை களை மேற்கொள்ளவில்லை என்பதன் காரணமாக அரச அதிகாரிகள் மீது புகார் தெரிவிக்கின்றனர்.

இவர்கள் ஈழநாதத்தினூடாக அரச சார்பற்ற சமூக நல அமைப்புக்களிடம் விடும் வேண்டுகோள் எங்களது வாழ்க் கைக்கு எந்தவிதத்திலும் அரசு உதவ மாட்டாது என்று எங்களுக்கு நன்கு புரிந்துவிட்டது.

நீங்களாவது எங்களது களுதாவளைப் பிரதேச விவசாயிகளுக்கு ஏதாவது தங்களால் இயன்ற உதவிகளை வழங்குங்கள்.

## சிந்தனைக்கு



நாம் ஒரு இலட்சிய விதையை விதைத்திருக்கின்றோம்., அதற்கு எமது வீரர்கள் இரத்தத்தைப் பாய்ச்சி வளர்க்கின்றோம். இந்த விதை வளர்ந்து விருட்சமாகி எமது மாவீரர்களின் கனவை நனவாக்கும்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

ஈழநாதம்
கிழக்குப்பதிப்பு EEZHANATHAM
பிரதான வீதி, கொக்கட்டிச்சோலை.

மின்னஞ்சல் : batti@eezhanatham.com
தொலைபேசி : 065-2226110

**06-02-2005**

# யார் நண்பன் யார் எதிரி

நாடு தற்போது பேரழிவைச் சந்தித்திருக்கும் இன்றைய கால கட்டத்தில் புரிந்துணர்வுடன் செயற்பட்டு அழிந்து சிதைந்து கிடக்கும் தேசத்தை மீள் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஆனால் அம்பாறை மாவட்டத்தில் நடந்து வரும் சம்பவங்கள் ஒவ்வொன்றும் அவ்வாறானதொரு புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான எந்த நடவடிக்கைகளையும் கொண்டிருக்கவில்லை மாறாக மீண்டுமொரு போர் திணிப்பை சிறிலங்கா படைகள் மேற்கொள்வதை அவதானிக்கலாம்.

சிறிலங்காவின் ஆட்சி அதிகாரம் சிங்களப் பேரினவாதிகளின் கைகளுக்கு மாறிய தினத்தை சுதந்திர தினமாக சிறிலங்கா அரசு கொண்டாடி வருகின்றது.

அந்த வகையில் 57வது தினக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி எதிரிகளுடனும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஆழிப் பேரலை உணர்த்தி விட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

நண்பர்களைப் போன்று எதிரிகளுடனும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியம் உணர்த்தப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகவோ அல்லது அரசியல் தீர்வு குறித்தோ எந்தவொரு விடயத்தையும் அவர் தெரிவிக்கவில்லை. இருந்தும் ஜனாதிபதி எதிரிகள் என்று குறிப்பிட்டது யாரை விடுதலைப் புலிகளாக இருந்தால் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள்.

தமிழ் மக்களே புலிகள் புலிகளே தமிழ் மக்கள் என்ற வார்த்தைக்கிடையே ஜனாதிபதியின் கருத்தை ஆளமாக நோக்குமிடத்து ஜனாதிபதி அவர்கள் தமிழ் மக்களை எதிரிகளாகவே நோக்குகிறார் என்பதை வெளிப்படையாக தெரிவித்து விட்டார்.

பெரும்பான்மை இனத்தால் சிறுபான்மையினம் அரசியல் பொருளாதாரம், மொழியுரிமை உட்பட பல்வேறு காரணிகளால் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக மேற்கொள்ளப்பட்ட அரசியல் ரீதியான அறவழிப் போராட்டங்கள் எல்லாம் தோல்வியில் முடிந்தன.

தந்தை செல்வா உட்பட பல தமிழ் அரசியல் தலைவர்களின் கோரிக்கைகள் சிங்களப் பேரினவாத சக்திகளால் நிராகரிக்கப்பட்டதன் விளைவாக தமிழ் மக்களிடையே ஆயுதப் போராட்டம் உருவானது.

இன்று தமிழினத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். இந்நிலையில் தமிழினத்தை சந்திரிக்கா எதிரிகளாக நோக்குவாராயின் அது சமாதானத்துக்கான அடித்தளத்தை உருவாக்கும் விடயத்தினைப் பலவீனப்படுத்தும். சுனாமிப் பேரழிவின் பின் இந்த வார்த்தைப் பிரயோகங்கள் வெளிவந்திருப்பதிலிருந்து தமிழினத்தை அவர்கள் எதிரிகளாகவே நோக்கியிருந்துள்ளனர் என்பது புலனாகின்றது.

மறுபுறம் எதிரிகளை சுனாமிக்கு பின் நண்பர்களாக கருதி செயற்பட வேண்டிய காலம் வந்ததாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அப்படியானால் அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா படைத்தரப்பு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் ஜனாதிபதியின் கூற்றுக்கு முரண்பாடாகவுள்ளது.

ஆழிப்பேரலைக்கு பின் அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றனர். கட்டுக்கடங்காமல் போகும் இந்த அடாவடித்தனங்கள் மீண்டும் ஒரு போர்த் திணிப்புக்கான நடவடிக்கையாகவே கருத இடமுண்டு.

பெரும் உயிரழிவுகளை சந்தித்திருக்கும் அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த நிவாரணப் பணிகளில் அதிரடிப்படையினரின் குறுக்கீடு, விடுதலைப்புலிகளை ஆத்திரமூட்டுதல், போராளிகள் மீதான தாக்குதல்கள் நலன்புரி நிலையங்களிலுள்ள பெண்களை இம்சைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் அம்மையார் கூற்றுடன் ஒப்பிடும் போது உண்மை புரிகிறது.

# கொக்கட்டிச்சோலை பொது சந்தையில் மாபெரும் சிரமதானம்

(சசி)

மாவடிமுன்மாரிக் கோட்டத்தைச் சேர்ந்த இராணுவப் போராளிகள் மற்றும் அரசியல்துறையினரின் ஏற்பாட்டில் நேற்று கொக்கட்டிச்சோலை பொதுச் சந்தையில் மாபெரும் சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

இச்சிரமதானப் பணியில் மாவடிமுன்மாரிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ். உதயராஜ், பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ். அமலநாதன், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முனைக்காடு, முதலைக்குடா போன்ற கிராமங்களைச் சேர்ந்த பொது மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



இதில் கொக்கட்டிச்சோலை பொதுச் சந்தைக் கட்டிடம் மற்றும் வளாகம் என்பன துப்பரவு செய்யப்பட்டது.

# கிறிக்நாட்டு கப்பல் மருத்துவர்களுடன் திருமலைத் துறைமுகம் வருகை

(நமது நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் ஏனையவர்களுக்கும் மருத்துவ சிகிச்சை வழங்கவென கிறிக் நாட்டு அரசாங்கம் கப்பல் ஒன்றில் மருத்துவர்களை அனுப்பி வைத்துள்ளது.

சகல மருத்துவ வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ள ஓசன் மொனராத் என்ற இக்கப்பல் நேற்று காலை 10 மணிக்கு திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. கப்பலையும், மருத்துவக் குழுவினரையும் சிறிலங்காவிற்கான கிறிக் நாட்டுத் தூதுவர் எப்ரஸ்திஸ்லுஸஸ் வரவேற்றார். இக்கப்பல் திருகோணமலை துறைமுகத்தில் 2 மாத காலம் தரித்து நின்று திருகோணமலை மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்கும். இதில் 9 மருத்துவர்கள் அடங்கலாக 53 உத்தியோகத்தர்கள் பணியாற்றுகின்றனர்.

இதில் சத்திர சிகிச்சை கூடம், எக்ஸ்ரே நிலையம், மற்றும் ஏனைய ஆய்வுகூட வசதிகளும் உள்ளன. சிகிச்சைகள் யாவும் முற்றிலும் இலவசமாக வழங்கவுள்ளதாக கிறீக் அரசாங்கம் தெரிவித்துள்ளது. கிறீக் ஹெலனிக் உதவி திட்டம் மூலம் இச்சேவை வழங்கப்படவுள்ளது. இதில் 5,000 தொன் உணவுப் பொருட்கள், குடிநீர் போத்தல்கள், மருந்துப் பொருட்கள், சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள் என்பன எடுத்து வரப்பட்டுள்ளதாக தூதுவர் தெரிவித்தார்.

இதில் அம்பியூலன்ஸ் வண்டி ஒன்றும் கொண்டு வரப்பட்டுள்ளது. சிகிச்சை முடிந்ததும் திருகோணமலை சுகாதார திணைக்களத்திற்கு வழங்கப்படும். அத்துடன் எக்ஸ்ரே கருவிகளும் அன்பளிப்பாக வழங்கிவிட்டு செல்வதற்கு தாங்கள் எண்ணியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உதவிப் பொருட்களை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் காமினி ரொட்றிகோ சம்பிரதாயபூர்வமாக கிறீக் நாட்டுத் தூதுவர் எப்ரஸ்திஸ் லுஸசிடம் பெற்றுக்கொண்டார். அரசாங்க அதிபர் மருந்துப் பொருட்களை உத்தியோகபூர்வமாக பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏபிரகாமிடம் கையளித்தார்.

கடந்த மாதம் 24ம் திகதி கிறிக் நாட்டிலிருந்து இக்கப்பல் இலங்கை நோக்கி புறப்பட்டதாகவும், 12 நாட்கள் தங்களது பிரயாணம் இடம்பெற்றதாகவும் மருத்துவ சிகிச்சை வழங்குவதற்காக கிறீக்கில் உள்ள மஜஸ்டிக் இன்டர்நசனல் குரூசஸ் நிறுவனம் கப்பலை வழங்கியதாகவும், இம் மருத்துவ குழுவிற்கான தலைவர் எக்கணமோ தெரிவித்தார்.

இதில் ஒரே நேரத்தில் 500 பேர் தங்கியிருக்க முடியும் எனவும் திருகோணமலை சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மருத்துவ சேவைகளை வழங்கவுள்ளதாகவும், நோயாளர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து எமது சேவை மட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்த அவர், ஒரு மாதகாலம் திருகோணமலையில் தங்கியிருந்து சேவை வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.

# அலுனிமியப் பாத்திரங்களில் சமைக்கப்பட்ட உணவுகளை உண்பதற்கு மக்கள் அச்சம்

## சிறு நீரக நோய் ஏற்படலாமென எச்சரிக்கை

(நமது நிருபர்)

அலுமினியப் பாத்திரத்திரங்களில் சமைக்கப்பட்ட உணவு வகைகளை உண்பதன் காரணமாக மக்களுக்கு சிறு நீரக நோய்கள் ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் வாழும் அதிக எண்ணிக்கையான மக்கள் மண் சட்டி பானைகளிலேயே சமைக்க ஆரம்பித்துள்ளனர் என்று சுதேச சமூக நலன்புரி அமைச்சு தெரிவித்துள்ளது.

உணவு வகைகளை சமைப்பதற்கும், நீரைப் பருகுவதற்கும் அலுமினியப் பாத்திரங்களை உபயோகிப்பதால் உடல் நலக் குறைவு ஏற்படும் என்று வைத்திய ஆராட்சியல் மூலம் தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து மக்கள் மத்தியில் விழிப்பு நடவடிக்கையை அமைச்சு ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தில் உடல் நலன் பாதுகாக்கவேண்டுமானால் மண் பானைகள் மற்றும் சட்டிகளை உபயோகிக்க வே ண்டும் என வலியுறுத்தப்பட்டது.

# அம்பாறை மாவட்டத்தில் வீடுகள் அமைப்பதற்கு வீடமைப்பு அமைச்சு நடவடிக்கை

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் கடற் பேரலைகளினால் முற்றாகச் சேதமாக்கப்பட்ட 27 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு வீடமைப்பு அமைச்சும், நகர அபிவிருத்தி அதிகார சபையும் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளன.

இது சம்மந்தமான கூட்டம் ஒன்று வீடமைப்பு அமைச்சில் புதன் கிழமை நடைபெற்றது. அமைச்சர் பேரியல் அஷ்ரப் பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் உட்பட பலர் அங்கு சமூகமளித்திருந்தனர்.

அங்கு இடம் பெற்ற உரையாடலின் போது ஸ்மாயில் புரத்தில் 100 ஏக்கரும், பள்ளக் காட்டுப் பகுதியில் 150 ஏக்கரும், வீடமைப்புக்குள்ளானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நிந்தவூர், காரைதீவு, பாலமுனை உட்பட 07 பகுதிகளில் அரச காணிகள் இல்லாத படியால் 250 ஏக்கர் நெல் வயல்களைப் பெற்று மண் நிரப்பி வீடமைப்புத் திட்டங்களை மேற் கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய ஒரு வருட காலம் செல்லும் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ள்னர்.

# அம்பாறை மாவட்டத்தில் வயிற்றோட்ட நோய் அபாயம் இல்லை

(நமது நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் வயிற்றோட்ட நோய் ஏற்படும் அபாயம் எதுவும் இல்லை என்று சுகாதார அதிகாரிகள் உறுதி கூறியுள்ளனர்.

சுகாதார அதிகாரிகள் தகவல் தருகையில் அம்பாறை, மற்றும் கல்முனை உட்பட சகல பகுதிகளிலும் தொற்று நோய் ஏற்படக்கூடிய அபாயம் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்கள்.

அதே சமயத்தில் கல்முனை மற்றும் திருக்கோயில் பகுதிகளில் அகதி முகாம்களில் தங்கியிருந்த பெருந் தொகையானோர் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளார்கள்.

அதிகாரிகள் தகவல் தருகையில் நிவாரண நிலையங்களில் தங்கியிருப்போரின் எண்ணிக்கை 39 சதவீதத்தினால் குறைந்துள்ளது என்று தெரிவித்துள்ளனர். இவர்கள் அனைவருக்கும் சகல வசதிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஈழநாதம்
மட்டக்களப்பு பதிப்பு மக்கள் நாளிதழ்
Eezhanatham

# முஸ்லிம் வர்த்தக சமூகத்தால் பறங்கியர்களுக்கு பொருட்கள்

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தொகுதி அப்பியாசக் கொப்பிகளை வழங்க மட்டக்களப்பு நகர முஸ்லிம் வர்த்தக சமூகம் முன்வந்துள்ளது.

இதன் பிரகாரம் மட்டக்களப்பு பறங்கியர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குரிய அப்பியாசக் கொப்பிகள் கையளிக்கும் வைபவம் நேற்று மாலை பறங்கியர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

பறங்கியர் சங்கத் தலைவர் எஸ்.ரி.ஒக்கர்ஸ் இந்த அன்பளிப்புகளை தமது சமூகத்தின் சார்பில் பெற்றுக் கொண்டார்.

இது தொடர்பாக மட்டக்களப்பு நகர முஸ்லிம் வர்த்தகர் சமூகத்தின் செயலாளர் கியூ.எம்.ரவூப் தகவல் தெரிவிக்கையில்,

ஏற்கனவே ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களில் ஒரு பகுதியினருக்கு ஒரு தொகை நிதியுதவி தமிழர் புனர்வாழ்வு கழகம் ஊடாக வழங்கப்பட்டதாக கூறினார்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கு உதவும் திட்டத்தின் கீழ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சுவிஸ் கிளையினரால் உருவாக்கப்பட்டுள்ள சுவிஸ் தமிழ்க கிராம மாணவர்களுக்கும் இது போன்ற உதவிகளை வழங்கவிருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

**திருக்கோவிலில்...**

லொறியில் காணப்பட்ட பொருட்களை இறக்குமாறு பணித்தனர். அதற்கிணங்க நபர் அச்சாமான்களை இறக்கினார். பின்னர் மீண்டும் மற்றுமொரு பொறியிலுள்ள பொருட்களையும் இறக்குமாறு பணித்தனர்.

அதற்கு மறுப்புத் தெரிவிக்கவே அங்கு கூடிநின்ற பொது மக்களுக்கு மத்தியில் வைத்து அந்நபரைத் தாக்கியுள்ளனர். அதுமட்டுமன்றி "நீ சுனாமியினால் பாதிக்கவில்லை எதற்காக நிவாரணம் உனக்கு" என்றும் கேட்டுத் தாக்கினராம்.

இச்சம்பவம் திருக்கோவில் விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ரத்நாயக்காவிடம் அம்பாறை மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**தேசவிரோத...**

செலுத்தாதவர்கள் அங்கிருந்து வெளியேறி விட வேண்டும் என்று எச்சரிக்கை விடுப்பதாகவும் அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கவனத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கொண்டு வந்துள்ளது. கடந்த இரு தினங்களுக்கு முன்பு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் சகிதம் அப்பிரதேசத்திற்க விஜயம் செய்தார். இப்பிரதேசத்தில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் உப அலுவலகமொன்றும் திறக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசினால் முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை கண்காணிப்புக் குழு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

**தேசியத் தலைவரின்...**

யின் படத்தை வைத்துள்ளனர்.

சம்பவம் விடுதலைப்புலிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதையடுத்து மட்டு. அம்பாறை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கவியாளன் பிரதேச செயலகத்திற்கு சென்றுள்ளார்.அங்கே அகற்றப்பட்டிருந்த தேசியத் தலைவர் உருவப்படத்தை பழையபடி அதே இடத்தில் சுவரில் வைத்துள்ளார்.

அச்சம்பவத்தை பார்த்துக் கொண்டிருந்த அதிரடிப்படைச் சிப்பாய் ஒருவர் கவியாளனை நோக்கி துப்பாக்கியை நீட்டி சுட முயற்சித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து இரு தரப்பினருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. பின்னர் மீண்டும் தேசியத் தலைவரின் உருவப்படம் படைத்தரப்பால் அகற்றப்பட்டு ஜனாதிபதியின் உருவப்படம் மாட்டப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் பொறுப்பதிகாரி கவியாளனிடம் நடந்த சம்பவத்திற்கு மன்னிப்பு கேட்டாராம்.

இதேவேளை மேற்படி சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

**தேசிய...**

திருக்கோவிலில் நிவா ரணப் பொருட்களைப் பெறச் சென்ற இளைஞரொருவரை சரமாரியாகத் தாக்கியுள்ளனர். இதையெல்லாம் நாங்கள் பொறுத்துக் கொண்டோம்.

ஆனால் நேற்று திருக்கோவில் பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டிருந்த தமிழீழத் தேசியத் தலைவரின் புகைப்படத்தை அகற்றி வெளியே எறிந்திருக்கின்றனர். இதை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். எங்கள் தேசியத் தலைவரின் படத்தை அகற்றி வீசுவதற்கு விசேட அதிரடிப்படையினருக்கு எந்தவித உரிமையும் இல்லை.

தேசியத் தலைவரின் படத்தை அகற்றி வெளியே வீசியதால் அங்குள்ள பொதுமக்கள் பீதியடைந்துள்ளனர். இச்சம்பவம் இடம் பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர்கள் ஜே.வி.யினர் அண்மையில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அழையா விருந்தாளியாக சமூகமளித்த ஜே.வி.பி.யினர் அங்கிருந்த தேசியத் தலைவரின் படத்தைக் கண்டு இதனை இன்னும் 7 நாட்களுக்குள் அகற்ற வேண்டுமென பிரதேச செயலாளரிடம் கூறினார்.

ஆனால் இதுவரை அதனை பிரதேச செயலாளர் அகற்றாததால் நேற்று பிரதேச செயலகத்திற்குள் உட்புகுந்த விசேட அதிரடிப்படையினர் அதனைக் அகற்றி வெளியே எறிந்துவிட்டு அதில் சந்திரிகாவின் படத்தை கொழுவியிருக்கின்றனர். இது மனிதாபிமானமற்ற ஒரு செயல் இதன் மூலம் சிங்கள அரசு பாரிய விளைவினை எதிர்கொள்ள வேண்டி வருமெனவும் அக்கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விரைவாக...**

சிறிலங்காத் தூதுவருடனான சந்திப்பு ஆழிப்பேரலை இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்ட பேரழிவினால் பாதிக்கப்பட்ட எமது மக்களின் உடனடி மனிதாபிமான உதவிகள் நிவாரணப்பணிகள் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பது புலிகளும் சிறீலங்கா அரசும் இணைந்து ஒரு பொதுக்கட்டமைப்பினை நிறுவுவது தொடர்பாக கடந்த காலங்களில் உரையாடப்பட்டு வந்தது.

நோர்வே அனுசரணையாளர்கள் என்ற வகையிலும், அதில் நோர்வேத் தூதுவர் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார் என்ற வகையிலும் தீர்மானங்களை எடுப்பதற்கும் நடைமுறைச் சிக்கல் தொடர்பாக நேற்று கலந்துரையாடியுள்ளார். குறிப்பாக இன்றைய சந்திப்பில் எம்மால் தெளிவுபடுத்தப்பட்ட விடயம் ஆழிப்பேரலை அனர்த்தம் நடந்து ஒரு மாதம் கடந்து விட்டது.

எம்மக்களுக்கான நிவாரண மீள் கட்டுமாணப் பணிகளை முன்னெடுப்பதற்கு சர்வதேச உதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்கு எவ்வித கட்டமைப்புக்களையும் நிறுவுவதற்கான எவ்விதமான ஆக்கபூர்வமான நடைமுறைகள் எதுவும் எட்டப்படாது, எமது மக்கள் மத்தியில் விரக்தி நிலையையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது என்பதை நோர்வேத் தூதுவருக்கு எடுத்துக்கூறியுள்ளோம்.

விரைவாக சர்வதேச உதவிகள் எமது பகுதிகளுக்கு திருப்ப வேண்டும் என்பதனையும் இதில் வலியுறுத்தியுள்ளோம். எங்களால் கொடுக்கப்பட்ட ஆலோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை. இந்த வகையில் பொதுக்கட்டமைப்பினை நிறுவுவது எந்தளவு சாத்தியம் என்பது பற்றிக் கூற முடியாதுள்ளது. ஏனெனில் அரசாங்கம் புதிய நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருப்பதாக தெரிகிறதே தவிர பொதுக்கட்டமைப்பினை நிறுவுவதற்கு மனப்பூர்வமாக செயற்படுவதாக தெரியவில்லை.

சர்வதேச உதவிகளை விரைந்து நடைமுறை ஒழுங்குகளுக்கு ஏற்ப எமது மக்களுக்கு பகிர்ந்தளிக்க நேரடியாகக் கிடைக்கக்கூடிய வகைகளை சர்வதேச சமூகம் பரீசிலிக்க வேண்டும் என்பதனையும் இன்றைய சந்திப்பில் வலியுறுத்தியுள்ளோம்.

**கேள்வி:-** அரசு ஏதாவது புதிய செய்திகள் அனுப்பி வைத்துள்ளதா?

**பதில்:-** ஏற்கனவே எமது வடக்கு கிழக்கு தாயகப் பிரதேசத்தினுடைய நிவாரணப்பணிகள் மீள்கட்டுமாணப் பணிகள் அபிவிருத்தி நடவடிக்கைகளை குறிப்பாக ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளையும் அங்கு வசிக்கும் மக்களுக்கு உதவுவதற்கான ஆலோசனைகளை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாக அரசுக்கு அனுப்பியிருந்தோம். எங்கள் ஆலோசனைக்கு எதிர்மறையான முடிவுகளைத்தான் தங்கள் கருத்துக்களாக அனுசரணையாளர்களூடாக எமக்குத் தெரியப்படுத்தியுள்ளார்கள்.

அரசின் முடிவுகள் எமக்கு அதிர்ச்சி தருபவையாக உள்ளது. நடைமுறைச் சாத்தியமற்ற முடிவுகளை அரசு தெரியப்படுத்திக் கொண்டிருப்பது இணக்கப்பாட்டிற்கு வந்து செயற்பாடுகளை மந்தப்படுத்தும் நோக்கோடுதான் அரசு செயற்படுவதாக எம்மால் உணர முடிகின்றது என்பதை இன்றைய சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சர்வதேச உதவிகள் ஏனைய வழிமுறைகள் ஊடாகவே வந்து சேரவேண்டும். அதற்கு உரிய வாய்ப்பினை எற்படுத்த வேண்டும் என்பது தான் எமது நிலைப்பாடாக உள்ளது.

**கேள்வி:-** எந்த வகையில் புலிகளுக்கும் அரசுக்கும் தற்போது முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன?

**பதில்:-** பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படையில் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும். சர்வதேச உதவிகளை தமிழர் தாயகத்திற்கு கொண்டு வருவதற்கு ஒரு நடுநிலையான சர்வதேச நிறுவனமே உதவிப்பொருட்களை பகிர்ந்தளிக்க பொறுப்பாக இருக்க வேண்டும். வடகிழக்கிற்கான பாதுகாவலனாக நிவாரண மீள்கட்டுமான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஒரு சர்வதேச நிறுவனம் இருக்க வேண்டும் என்பதனை நாம் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறான ஒரு அமைப்பினூடாகத்தான் சர்வதேச உதவிகள் எமது பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதனை கடந்த கால அனுபவங்களின் அடிப்படையிலும் எம்மால் வலியுறுத்தப்பட்ட விடயம் ஆகும்.

அரசு எமது முடிவுகளை கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. மேலும் வட கிழக்கிலே முஸ்லிம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே முஸ்லிம்களின் பிரதிநிதித்துவமும் சில மாவட்டங்களில் பேணப்பட வேண்டும் என்பதனையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறு பல்வேறுபட்ட விடயங்கள் கட்டமைப்பிலே உள்வாங்கப்பட வேண்டிய பிரதிநிதித்துவம் சம்பந்தமாக தமிழர் தாயகத்திற்கான மீள்கட்டுமான நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்கான நிதியத்தின் பாதுகாவலனாக நியமிக்கப்படும் விடயங்களிலும் பல சிக்கல்கள் இருப்பதாகவே எமக்கு தெரிகின்றது.

**கேள்வி:-** சிரான் அமைப்பு போன்று தான் இவ்வமைப்பிற்கு ஏற்படும் என்று நீங்கள் நம்புகின்றீர்களா?

**பதில்:-** எங்களைப் பொறுத்த வரையில் இதுவொரு உண்மையிலே இயற்கைப் பேரனர்த்தத்தால் பாரியளவு மனிதாபிமான நெருக்கடியைச் சந்திக்கும். மக்களுக்கு உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பது அவசியமானது. சிறிலங்காவில் மட்டுமல்ல. தென்னாசியா முழுவதுமே பேரிழப்பினைச் சந்தித்துள்ளது. மனிதாபிமான உதவியை சந்தித்து நிற்கும் சூழலில் இலங்கைத் தீவிலேயும் தமிழர் தாயகம் தான் கூடுதல் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளது.

சர்வதேச உதவிகள் எமது பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பது ஒரு மனிதாபிமான தேவையாக உள்ளது. மனிதாபிமானத் தேவைகள் எழுந்து நிற்கும் சூழலில் கடந்த காலத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் போல் தீர்வு காணப்படாமல் போன விடயங்கள் போல் இந்த மனிதாபிமான உதவிகளையும் இழுத்தடிக்க முடியாது. உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தியுள்ளோம் முடிவுகள் எப்படி போகும் என்பதை எம்மால் கூறமுடியாது.

நடமுறையில் அரசாங்கம் ஒத்துழைப்பு தராத நிலைதான் இன்று வரையுள்ளது.

**கேள்வி:-** அரசு எடுத்திருக்கும் முடிவுகள் தங்களுக்கு நம்பிக்கை இழக்கச் செய்துள்ளதா?

**பதில்:-** நிச்சயமாக அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதாகவும் தாம் பேசிக்கொண்டிருப்பதாகவும் ஒரு தோற்றப்பாட்டை காட்டி வருகிறதே தவிர ஒரு கட்டமைப்பினை நிறுவி விரைந்து மக்களுடைய மனிதாபிமான நெருக்கடிக்கு தீர்வுகாண அரசு முயற்சி எடுப்பதாகத் தெரியவில்லை. பொய்யான தோற்றப்பாட்டை உருவாக்கி சர்வதேச உதவிகளை கவர்ந்திழுக்கும் ஒரு முயற்சியில் தான் அரசு இறங்கியுள்ளதே தவிர பாதிக்கப்பட்ட மக்கள் உதவிகள் புரிய வேண்டும் என்பதில் அரசு அக்கறை செலுத்தவில்லை. அரசின் போக்கு எமக்கு நம்பிக்கை தருவதாகத் தெரியவில்லை.

**கேள்வி:-** உதவி வழங்கும் நாடுகளின் நிலைப்பாடு எப்படி உள்ளது.?

**பதில்:-** சர்வதேச நிறுவனங்கள் முழு அளவிலான அழுத்தத்தைப் பிரயோகித்துக் கொள்கின்றார்கள். இரண்டு தரப்பும் இணைந்து ஒரு பொதுக் கட்டமைப்பினை உருவாக்குவதன் ஊடாகவே சரியான வகையில் சர்வதேச உதவிகள் சரியான முறையில் சேர்க்கப்படும் என்பது ஒரு எண்ணப்பாடாகவும் விருப்பமாகவும் உள்ளது.

ஆனால் பொதுக்கட்டமைப்புக்களுக்கான உருவாக்கத்திற்கான சூழல் உருவாக்கப்படவில்லை. இனி சிறிலங்கா அரசினை நம்பிக் கொண்டிருக்க முடியாது என்பதனையும் சர்வதேச சமூகத்திடம் கூறி வருகின்றோம். சர்வதேச உதவிகள் நேரடியாக இங்கு கொண்டு வரக்கூடிய வழிமுறைகளை சர்வதேச சமூகம் கண்டறிய வேண்டும் என்பதனை யதார்த்தத்தின் அடிப்படையில் எம்மால் வலியுறுத்தப்பட்டது.

**கேள்வி:-** சர்வதேச உதவிகள் நேரடியாக வரக்கூடிய சூழல் உள்ளதா?

**பதில்:-** சர்வதேச சமூகத்திடம் ஒரு பாரிய பொறுப்பு உள்ளது. ஒரு மனித இனம் பேரிழிவினைச் சந்திக்கும் நிலையில் உதவிகள் செய்ய வேண்டும் என்பது சர்வதேச சமூகத்தின் கடமையும் பொறுப்புமாகும். அந்த வகையில் பேரழிவைச் சந்தித்து நிற்கும் எமது மக்களுக்கு சர்வதேச சமூகம் நேரடியாக உதவிபுரியும் என நம்புகிறோம். அதற்கான முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம்.

**கேள்வி:-** ஆழிப்பேரலையின் பின்பு சிறுவர்களை புலிகள் இணைப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளதே?

**பதில்:-** சிறுவர்களை இணைக்கிறோம் என குற்றம் சாட்டுகிறார்களே தவிர இந்தப் பேரனர்த்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான சிறுவர்களை தமிழீழ விடுதலைப்புலிகள் புனர்வாழ்வுப் பணிகளிலும் மறுவாழ்வுப் பணிகளிலும் ஈடுபடுத்தியுள்ளதை குற்றம் சாட்டுபவர்கள் திரும்பிக்கூடப் பார்க்காதவர்களாக உள்ளனர்.

தற்போது கூட ஆழிப்பேரலையினால் ஆயிரக்கணக்கான சிறார்கள் பெற்றோர்களை இழந்து எந்தவித உதவிகளும் கிடைக்காத நிலையில் பரிதவித்த நிலையில் உள்ளனர். அச்சிறார்களுக்கு ஆக்கபூர்வ உதவிகள் புரியாமல் விடுதலைப்புலிகள் மீது குற்றம் சாட்டுவதிலும் சேறு பூசுவதிலும் பொய்ப்பரப்புரை செய்வதிலும் சில அமைப்புக்கள் ஈடுபட்டுள்ளனர் இது எமக்கு மிகுந்த கவலையைத் தருகிறது என்றார்.

## புதுக்குடியிருப்புக்கு நிவாரண முத்திரை

(தனஞ்ஷயன்)

சுனாமி கடல் காவுகையால் மண்முனைப் பற்றுப் பிரதேச பிரிவில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு கிராமத்தில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாரம் ஒன்றிற்கு 375 ரூபா பெறுமதியான முத்திரை விநியோகம் நேற்று இக்கிராமத்தில் இடம்பெற்றது.

இப்பத்திரிகை நித்தி பதிப்பகத்தால் 06.02.2005 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது